
# SPECIAL ISSUE

# விஷ்வவாணி சமர்ப்பண்

Rs. 10/-
Vol. 27 - Issue 2
February 2014



“எப்பொழுதும் இயேசுவுக்குள்;
எதுவும் இயேசுவின் மூலம்;
எல்லாம் இயேசுவுக்காக”

-எமில் அண்ணன்

(10.01.1941 - 19.12.2013)

# எமில் அண்ணனின் இதய வரிகள்

பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையில் சிந்தியுங்கள், பேசுங்கள், பணிகளை நிறைவேற்றுங்கள்!

சகோதரரே,
இஸ்ரவேலர் (இந்தியர்)
இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே
என் இதயத்தின் விருப்பமும்
நான் தேவனை நோக்கிச் செய்யும்
விண்ணப்பமுமாயிருக்கிறது.
(ரோமர் 10:1)

நான் மற்றொருவனுடைய
அஸ்திபாரத்தின் மேல்
கட்டாதபடிக்கு
கிறிஸ்துவினுடைய நாமம்
சொல்லப்பட்டிராத இடங்களில்
சுவிசேஷத்தை அறிவிக்கும்படி
நாடுகிறேன். (ரோமர் 15:21)

- தேவனுக்குத் தெரிந்தவனாயிரு, மனிதனுக்கு மறைந்தவனாயிரு!
- பெருமை இருந்தால் பரிசுத்தாவியானவர் விலகுவார்!
- வளர்ச்சியைவிட நீடித்திருக்கும் வளர்ச்சியே பிரதானம்!
- தெளிவு இருந்தால் துணிவு வரும்!
- குறுகிய காலம் அல்லது நீண்ட காலம் உழைக்கும் ஊழியர் அல்ல, ஆயுட்காலம் முழுதும் உழைக்கும் ஊழியர்களே தேவை!
- பாவம் என்பது எளிதில் எட்டும் தூரத்தில்! பாவம் வசீகரிக்கும், ருசிக்கும் - அதன் முடிவோ மகா கொடிதாயிருக்கும்!
- சுவிசேஷ ஊழியம் சம்பிரதாயமான சேவை அல்ல, யுக்தியோடும், புத்தியோடும் சரியாய்ச் செய்துவிடவேண்டிய பணி!
- சொற்ப திட்டமிடுதலிலும் மிகுந்த சேமிப்பு உண்டு!
- சுவிசேஷ வேலையைப் பொருத்தவரை சொற்களைக் காட்டிலும் செயல்பாடுகளே அதிகம் பேசவேண்டும்!



FEB 2014

விஷ்வவாணி

விஷ்வவாணி சமர்ப்பண் பத்திரிகை தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, மராத்தி, குஜராத்தி, ஹிந்தி, ஒரியா, பெங்காலி, ஆங்கிலம் ஆகிய பத்து மொழிகளில் பிரதி மாதமும் வெளியிடப்படுகின்றது. ஆண்டு சந்தா ரூ. 100/-

**பதிப்பு அலுவலகம் :**
1-10-28/247, ஆனந்தபுரம், குஷாய்குடா,
E.C.I.L. P.O, ஹைதராபாத் - 500 062. ✆27125557,
Fax: 27126004. E-mail: samarpan@vishwavani.org
**நிர்வாக அலுவலகம்:**
36, 3வது தெரு, T.M.P. நகர், புதூர்,
அம்பத்தூர், சென்னை - 600053. Ph: 26864283,
Fax: 26864284; Website: www.vishwavani.org
E-mail: vishwavaninet@vishwavani.org

## பருகப்போவது

எமில் அண்ணனின் இதய வரிகள்
அண்ணனுடன் என் அனுபவங்கள் 1
சுவிசேஷப் பணியின் தொனி 4
மனிதனுக்கு மரணம் இல்லை 5
மரணம் என்பது மங்களம் 9
அன்பின் அடிச் சுவடுகள் 11
மனிதரைத் தேடிய மாமனிதர் 12
அண்ணன் ஓர் அறைகூவல் 16
என் இதயம் தொட்ட அண்ணன் 17
சுவிசேஷ சகாப்தம் 18
பணித்தளச் செய்திகள் 25
தளங்களில் 10 புத்தாலயங்கள்

**மொபைலில்**
**எமில் அண்ணன் பாடல்கள்:**
http:\\m.emiljebasingh.com
**மேலும்** youtube **லும் காணலாம்.**

# எமில் அண்ணனுடன் என் அனுபவங்கள்

அன்புக்குரியவர்களே,

எப்பொழுதும் இயேசுவுக்குள்! எதுவும் இயேசுவின் மூலம்!! எல்லாம் இயேசுவுக்காக!!! என்று இயேசுவின் நாமம் இந்திய மண்ணிலே மகிமைப்படும் வண்ணம் இரவு பகலாக இயேசுவின் புகழ்பாடிய அண்ணனை இயேசு அழைத்துச் சென்றுவிட்டார். அண்ணனின் மிகச் சிறந்த வாழ்க்கைக்காக தேவனை நன்றியுடன் துதிக்கிறோம்.

விஷ்வவாணி ஊழியத்தில் 33 வருடங்கள் அண்ணனுடன் இணைந்து பணிபுரிய தேவன் கொடுத்த சிலாக்கியத்திற்காகத் தேவனைத் துதிக்கின்றேன்.

1980ம் வருடம் தூத்துக்குடியில் தொழிலில் ஈடுபட்டிருந்த நேரம் ஒரு நாள், அண்ணன், ‘‘தம்பி இது நீங்கள் செய்யவேண்டிய வேலை இல்லை. நீங்கள் தேவ பணி செய்யவேண்டும், வாருங்கள்’’ என்றார்கள். தேவன் அண்ணன் மூலம் பேசுகிறார் என்று அறிந்து 1981 ஜனவரி முதல் விஷ்வவாணி ஊழியத்தில் இணைந்தேன். அண்ணனோடு ஆரம்பித்த முதல் ஊழியம் முன்னேற்றப்பணி, ஊழியத்திற்காக நிதி திரட்டுதல். நானும் சகோ. C.V. பிரபாகரும் சகோ. பூமிநாதனும் ஒரு குழுவாக இணைந்து பணிபுரிந்தோம். அண்ணன் அடிக்கடி சொல்வது: பணப்பிரச்சனை வந்தால், எல்லாப் பிரச்சனைகளும் பின்தொடரும். ஆதலால் ஊழியத்திற்கு பணம் மிகவும் முக்கியம். நமக்கு மிக வலிமையான நிதி அடிப்படை வேண்டும் என்பார்கள். அதற்காகத் திட்டமிட்டு செயல்படுத்துவதிலே அண்ணன் மிகவும் திறமை மிக்கவர்கள்.

அன்று முதல் இன்று வரை வலுவான நிதி நிலைமை இருக்கக் காரணம் அன்று அண்ணன் போட்ட அஸ்திபாரம் தொடர்ந்து ஸ்திரமாக, வலுவாகச் செயல்பட்டுவருகின்றது.



அண்ணன் அதிகாலையில் எழும்பி, ஆண்டவரின் பாதத்தில் அதிக நேரம் செலவுசெய்பவர்கள். அவர்கள் எங்களுக்கும் கற்றுக்கொடுத்தது, அதிகாலையில் எழும்புவதையும், குறைந்தது ஒரு மணிநேரமாவது முழங்காலில் இயேசுவுடன் செலவுசெய்வதையும்தான். அதை இன்றுவரை தொடருவதன் பலனால், ‘ஜெபம்’

எனும் உறுதியான 'கன்மலை'யின்மேல், ஆழமான 'அஸ்திபாரத்தின்' மேல் விஷ்வவாணி ஊழியங்கள் கட்டப்படுகின்றது. இன்றும் இவ்வூழியத்தில் ஜெபம் முதலிடம் பெறுவதற்குக் காரணம் அண்ணன் தந்த ஊக்கம்தான்!

**செயல்முறை** (System), **தரம்** (Standard), **கண்காணிப்பு**(Supervision):

### செயல்முறை (System)

எதையும் தெளிவான செயல்முறையுடன் செய்வதற்கு நிர்வாகத்தில் பழக்குவித்தவர்கள் அண்ணன். ஏனோ, தானோ என்பது அவர்களது அகராதியிலும் இல்லை; அதற்கு அனுமதித்ததும் இல்லை. தளம் திறப்பது, ஊழியர் தெரிவுசெய்வது, பணியமர்த்துவது, ஐந்து கிராமங்களுக்கு ஒருவராய் ஊழியம் துவங்குவது, முறைப்படி பணிசெய்வது, திருமுழுக்கு கொடுப்பது, திருச்சபை உருவாக்குவது, சபைகளை திடப்படுத்துவது என்று எல்லாவற்றிற்கும் திட்டவட்ட செயல்முறைகள், தெளிவான வழிமுறைகளை அமைத்தவர்கள் அண்ணன்.

### தரம் (Standard)

அண்ணன் செய்யும் அனைத்துப் பணிகளும் தரம் மிக்கதாக இருக்கும். ஊழியரின் தரமே ஊழியத்தின் தரம், ஒரு கூட்டம் நடத்துவது என்றால் நோட்டீஸ் அடிப்பதில் இருந்து அதன் பின்தொடர் பணி வரை தரம் உயர்ந்ததாக இருக்கக் கற்றுக்கொடுத்தவர்கள். உன்னத தேவனுடைய பணி உன்னதமான முறையில் நடைபெற, எல்லா விதத்திலும் பிரயாசம் எடுத்தவர்கள், கற்றுத் தந்தவர்கள். எழுதுவதில் திறமை மிக்க அண்ணன், பத்திரிகை தரமானதாக வெளிவர சகல முயற்சியும் பயிற்சியும் கொடுத்தவர்கள். தரமாக யாவற்றையும் செய்வதில் தனித் திறமை பெற்றவர்கள் எமில் அண்ணன் அவர்கள்.

### கண்காணிப்பு (Supervision)

பணித்தளப் பணி, அபிவிருத்திப் பணி, அலுவலகப் பணியில் அனைவருக்கும் தெளிவான வேலைத் திட்டம், தின, வாராந்திர, மாதாந்திர அறிக்கைகள், யார், யாருக்கு அறிக்கை கொடுக்கவேண்டும், யார், யாரையெல்லாம் மேற்பார்வையிட வேண்டும் என வரைமுறை களை உருவாக்கித் தந்தவர்கள். சிறப்பான பணிக்கு, கடுமையான மேற்பார்வை அவசியம் என்பதைக் கற்றுக்கொடுத்தவர்கள். பணித்தளம் என்றால் 5 கிராமத்துக்கு ஒரு ஊழியர், 5 ஊழியருக்கு ஒரு கண்காணிப்பாளர், 5 கண்காணிப்பாளர்களுக்கு ஒரு தள ஒருங்கிணைப் பாளர், 5 தள ஒருங்கிணைப்பாளருக்கு ஒரு பணி ஒருங்கிணைப்பாளர் என சிறப்பான கண்காணிப்புத் திட்டத்தைத் தந்தவர்கள். ஊழிய வளர்ச்சிக்கு இது ஒரு சிறப்பம்சம்.

ஊழியம், ஊழியர் மீது உண்மை அன்பு, கரிசனை, இரக்கம், மனவுருக்கம் கொண்டவர் கள். ஆனால் தேவப் பணி என்று வந்துவிட்டால் இராணுவத்தைப் போல் கண்டிப்பான சட்டதிட்டங்கள் ஸ்திரமாக முன்னேறிச் செல்லும் ஊழியங்களுக்கு வெகு அவசியம் என்று கூறி, கடைபிடிக்கச் செய்பவர்கள். இதுவும் அண்ணனிடம் கற்றுக்கொண்டதே!

எதைச் செய்தாலும் நன்மையாக, செம்மையாக, உண்மையாகச் செய்யப் பயிற்சியளித் தார்கள். 2020க்குள் "ஒரு இலட்சம் கிராமங்கள் - 120 மாவட்டங்கள் - 300 மக்கள் இனங்கள்" என்று கூறி விஷ்வவாணி தரிசனத் திட்டத்தில் 1 இலட்சம் கிராமம் அல்ல அதற்கும் மேல்; 2020 வரை அல்ல அதற்கும் முன் என்று எப்பொழுதுமே ஊக்கப்படுத்தியவர்கள்.

ஒரு இலட்சம் கிராமங்களைச் சந்திக்க ஒரு இலட்சம் விசுவாசக் குடும்பங்களைக் கண்டுபிடிக்க பிரதிநிதிகள் முன்னணியில் நிற்கவேண்டும்; பிரதிநிதிகளை மையமாக வைத்து முன்னேற்றப்பணி நடைபெற வேண்டும் என்பதை வலியுறுத்தியவர்கள்.

மந்தை பெருக ஆடுகள் ஈனவேண்டும்; திருச்சபை வளர விசுவாசிகள் சீஷர்களாக மாறி, புதிய நபர்களைத் திருச்சபைக்குள் அழைத்துவர வேண்டும். தளங்களில் சபை வளர்ச்சி, புதிய விசுவாசிகளால் நிகழவேண்டும் என புதிய பயிற்சி முறைகளை அறிமுகப்படுத்தியவர்கள்.

ஒவ்வொரு தளமும் ஒரு வேதாகமப் பாடசாலையாகச் செயல்பட விசுவாசிகள் சீஷர்களாக மாற பாடத்திட்டத்தைத் தளங்களுக்குத் தந்தவர்கள். அறியப்படாத இடங்களில் உருவாகும் சபைகள், சுய நிர்வாகம், தன்னிறைவு பெற்று சுயமாக அண்டை கிராமங்களைச் சந்திப்பதில் ஆர்வமுடன் செயல்பட தீர்க்கமாக உரைத்தவர்கள்.



கலாச்சாரம் தாண்டிய ஊழியம் கரைகாணவும், அந்தந்த 'மாநிலம், மக்கள்,

இனம்' மூலம் பணி ஆழம்காண அயராது உழைத்து, உலகளவில் இந்திய ஊழியங்களுக்கு கனம்சேர்த்தார்கள். இந்திய ஊழியங்கள் தன்னிறைவு பெற்ற ஊழியங்களாய்ச் செயல்பட பிரயாசம் எடுத்தவர்கள்.

1993ம் ஆண்டு முதல் விஷ்வவாணி ஊழியத்தின் நிர்வாகப் பொறுப்புகளை இளைய தலைமுறையினருக்குக் கொடுத்து, மிகக் கவனமாகக் கண்காணித்து வழிநடத்தியவர்கள். விஷ்வவாணியின் ஆட்சிக்குழு, பொதுக்குழுவில் இந்தி, மராத்தி, குஜராத்தி, ஒடியா, பெங்காலி, தெலுங்கு, கன்னடம், தமிழ் என பல மொழியினரைக் கொண்டுவந்து "ஊழியம் என்பது ஒரு குடும்பத்தினரைக் கொண்டிருக்கக் கூடாது; தேசிய வர்ணம் கொண்டதாய் இருத்தல் அவசியம்" எனக் கூறுவார்கள்.

## வருகை வரை தொடர்வோம்...

அண்ணனுடைய சிறந்தக் கோட்பாடுகள், உயர்ந்த இலட்சியங்களுடன், ஜெபம்-வேத வசனம்-விசுவாசம் மூலம் கட்டப்பட்ட விஷ்வவாணி ஊழியம் சுத்தாங்க சுவிசேஷத்தை அறியப்படாத இடங்களில் அறிவிக்கவும் ஒரு இலட்சம் கிராமங்கள் ஆசீர்வதிக்கப்படுவதைக் காணவும் தொடர்ந்து பணிபுரியும்; ஆண்டவருடைய வருகை வரை ஊழியங்கள் உன்னதம் மகிழத் தொடரும். தொடர்ந்து ஜெபிப்போம், இணைந்து உழைப்போம், இயேசுவின் நாமம் மகிமைப்படட்டும். அவரது இராஜ்ஜியம் கட்டப்படட்டும்.

## எமில் அண்ணனின் கட்டுரைகள்...

சமர்ப்பண் பத்திரிகை மூலம் கர்த்தருக்குள் ஆழமாய் நம்மை நடத்தும் வண்ணம் அண்ணன் இதுவரை எழுதிய கட்டுரைகளையும் சிறந்த சிந்தனைகளையும் தொகுத்து இனிவரும் இதழ்களிலும் தொடர்ந்து பிரசுரிக்க தேவனுக்குள் தூண்டப்படுகிறோம். 1988ம் வருடம் துவக்கம் அண்ணன் எழுதித் தந்த வரிகள் விஷ்வவாணி சமர்ப்பண் பத்திரிகையில் மறுபடியும் வெளிவரவுள்ளது. வாசித்து, தேவனுக்குள் வல்லமையாய் வளருவீர்களாக.

## அன்புகலந்த நன்றிகள்...

எமில் அண்ணனின் பெலவீன நாட்களில் உதவிபுரிந்த வேலூர் சி.எம்.சி. மருத்துவமனை அதிகாரிகள், மருத்துவர்கள், மருத்துவ ஊழியர்களுக்கும், 21.12.13 அன்று துதி, ஸ்தோத்திர ஆராதனையை நடத்தித்தந்த மருத்துவமனை போதகர்களுக்கும் அதிக நன்றிகூறுகிறேன். ஜெபித்து ஆறுதல்படுத்திய CSI பிரதம பேராயர் பேரருட் பெருந்திரு. தேவகடாட்சம் ஐயா, திருநெல்வேலி திருமண்டல பேராயர் மாகனம் கிறிஸ்துதாஸ் ஐயா, தூத்துக்குடி-நாசரேத் திருமண்டல பேராயர் மாகனம் ஜெபச்சந்திரன் ஐயா மற்றும் கனம் குருமார்களுக்கு நன்றிகூறுகிறோம். 23.12.13 அன்று தூத்துக்குடியில் துதி ஸ்தோத்திர ஆராதனைக்கு அனைத்து விதத்திலும் உதவிய தனிநபர்கள், குடும்பங்கள், CSI சிதம்பர நகர் அபிஷேக நாதர் ஆலயப் போதகர், சபை குழு, பங்கேற்ற ஊழியத் தலைவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். சென்னை தூய பவுல் ஆலயத்தில் 11.01.14 அன்று இடம்பெற்ற துதி கூடுகையிலும் தேவ தாசர்கள், சபை குழு, போதகர் என அனைவரது பங்கேற்பும் சிறப்பாயிருந்ததை அறிந்தேன். தேவ நாமம் மகிமைப்பட்டதற்காய் ஸ்தோத்திரம்.

அண்ணன் குடும்பத்திற்காக, அண்ணன் விட்டுச் சென்றிருக்கும் ஊழியக் குடும்பத்திற்காக தயவாய் ஜெபியுங்கள். நம் தேசம் தேவனை அறியும் அறிவில் நாளும் வளருவதாக!

ஹைதராபாத் — அன்பரின் பணியில் உங்கள் சகோதரன்

16.01.2014 — P. செல்வராஜ்.

## தீரமான மாமனிதர்

"தன்னுடைய தொடர் முயற்சியினால் இந்திய திருச்சபைகளில் ஆழ்ந்த தாக்கத்தை உருவாக்கிய ஓர் தீரமான மாமனிதரை நாம் இழந்துவிட்டோம். அன்பு அண்ணனின் பாடல்களைப் பல கோடிப் பேர் பாடும் பொழுது அறியப்படாத கோடாகோடி மக்களைக் குறித்து அப்பாடல் வரிகள் அறைகூவலிட்டு அழைக்கும். தேவன் தாமே இன்னும் அநேகரை அண்ணனைப் போல் எழுப்புவாராக." – அகஸ்டின் ஜெபக்குமார், ஜெம்ஸ், பீஹார்.



# சுவிசேஷப் பணியின் தொனி!

- எபி சுந்தர் ராஜ், Founder Chairman, CIM.

இந்தியா சுதந்திரம் அடைந்து, 15 ஆண்டுகளான காலகட்டத்தில், உலகளாவிய கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் தம் ஊழியங்களுக்கு முற்றுப்புள்ளியிட்டுக் கடந்துசென்றன. அந்நாட்களில், "அறியப்படாத இடங்களுக்குச் சுவிசேஷம்" என்பது சில குறிப்பிட்ட ஸ்தாபனங்களைத் தவிர மற்றவர்களுக்கு பிரதானமாயிருந்ததில்லை.

சுவிசேஷத்தினால் தங்கள் தாய்த் திருநாட்டை நிரப்பவேண்டுமென்ற தணியா தாகம் இருபது வயதே நிரம்பிய சில இளைஞர்களின் இதயங்களில் பற்றியெரிந்தது. இதனால் ஊக்கத்தோடே ஜெபிக்க ஆரம்பித்தனர். ஜெபக்குழு என்று தங்களை அழைத்துக் கொண்டனர். விரைவில் இத்தரிசனமானது இந்திய விசுவாசிகளைப் பற்றிப்பிடித்தது. அந்த இளைஞர்களுள் ஒருவர்தான் நமது சகோதரர் எமில் ஜெபசிங்.

இக்குழுவிலுள்ள அநேகர் திட்டமிடுதலிலும், கூட்டங்களை ஒழுங்குசெய்து வழிநடத்துத லிலும் ஈடுபட்டிருந்த வேளையில், இவரோ சுவிசேஷ தொனியாய் மாறி, பிரசங்கிப்பதிலும், எழுதுவதிலும், ஊழிய தரிசனத்தைக் குறித்துப் பாடல்கள் இயற்றுவதிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். தமிழகம் முழுவதும் பாய்ந்துசென்ற இவரது தாகம் தேசமுழுவதிலும் பெரும் தாக்கத்தை உண்டாக்கிவிட்டது; சபைகளை உயிர்ப்பித்து, மிஷனெரிப் பணிக்கு ஊக்கப்படுத்தியது; உலகளாவிய சபைகளின் பிரதிநிதிகளாய்ச் செயல்பட்ட சபைகள் உயிர்பெற்று, 'சாட்சியின் ஜீவியத்திற்கு' திரும்பினர்.

1970களில் ஊடகங்களின் வலிமையை நன்கு அறிந்த சகோ. எமில், வானொலியை தன் பிரசங்க பீடமாக்கி, இந்தியாவில் சுவிசேஷம் எட்டாத இடங்களுக்கு இயன்றளவு எடுத்துச் சென்றார். வானொலி ஊழியத்தின் தொடர்புகளை விசுவாசிகள் வரிசையில் நிறுத்த விஷ்வவாணி ஊழியம்; மேய்ப்பனில்லா ஆடுகள்போல் ஆங்காங்கே தியங்கிய கூட்டத் தாருக்கு ஆராதனை வாய்ப்பு என தொடர்ச்சியாய் ஊழியங்களை துவக்கி, இயக்கினார்.

தற்காலத்தில் தேசத்தில் நிலவி வரும் சுவிசேஷ ஊழியத்தின் உத்தியில் திருப்தியடையாத சகோ. எமில் எல்லா மிஷன் ஸ்தாபனங்களையும் திருச்சபைகளையும் அழைத்து, பிளஸ் இந்தியா / தரிசனம் 2020 என்ற தனிப்பெரும் அமைப்பை உருவாக்கி, 2020க்குள் 20 சதவீத இந்திய விசுவாசிகளைக் காண தீவிரமாய்ச் செயல்பட்டார்.

தரிசனத் தலைவர், சிறந்த நிர்வாகி, சமூகத் தொண்டரான அவர் கவிஞருமாய்த் திகழ்ந்து, அநேக பாடல்களை எழுதினார். இன்றும் அப்பாடல்கள் கண்களை நனைக்கின்றன.

அந்த தீர்க்கதரிசியின் சத்தம் அமைதியாயிற்று. கவிஞனின் குரல் நின்றது என்பது வருந்தத் தக்கது. பரலோகத்தை இந்தியர்கள் நிரப்பினார்களா என்பதை அறிந்துகொள்ள அந்தப் பாவமில்லா நாட்டுக்குள் எமில் பிரவேசித்துவிட்டார். அவர் பாடின பாடலின்படி, பரலோகத்தை இந்தியர்கள் நிரப்பட்டும்! அவரது கனவு நனவாக கர்த்தர் நம்மை பயன்படுத்துவாராக, ஆமென்!

## தேசத்திற்கு தேவன் தந்த பரிசு

**"அண்ணனின் இழப்பினால் இதயம் வாடினும், 'ஆண்டவரே இந்திய தேசத்திற்காக நீர் எமில் அண்ணனை பரிசாக கொடுத்ததற்காக ஸ்தோத்திரம்' என தேவனைத் துதிக்கிறேன். உற்ற நண்பரும், ஆலோசனையில் சிறந்தவரும் அன்பு சகோதரருமாகிய அண்ணனை இழந்து வாடினும் ஒரு நாள் அக்கரையில் மீண்டும் சந்திப்போம், அவர் இயற்றிய பாடல்களை தேவமகிமைக்காக பாடுவோம் என நம்புகிறேன்."**

– டாக்டர் ஆஷிஷ் கிறிஸ்பல் – பெங்களூரு



2001 ஏப்ரல் விஷ்வவாணி சமர்ப்பண் இதழுக்காக
எமில் அண்ணன் எழுதிய கட்டுரை:

# மனிதனுக்கு மரணம் இல்லை!

பிறக்கும் குழந்தை அழுகின்றது; அது பெற்ற தாய்க்கு உற்சாகம் தருகின்றது! ஆனால் இறக்கும் மனிதர் அழுவது இல்லை; அவரைச் சுற்றி நிற்கின்றவர்கள் அழுகிறார்கள்! ஒரு குழந்தையின் பிறப்பு மகிழச் செய்கின்றது; ஒரு மனிதனின் இறப்பு மனிதரைத் திகைக்கச் செய்கின்றது!

கவலையை அடக்க முடியாதவர்களாக, கதறி கதறி அழுது, வழி அனுப்புகின்றோம். இதுவரை பெயர் கூறி அழைத்தவரை, உயிர் பிரிந்தவுடன் பிணம் என்கிறோம்; சவம் என்கிறோம்! அவர் வாழ்ந்த வீட்டில் இனி அவருக்கு இடமே இல்லை; சவக்குழி ஆயத்தமாகுகின்றது!

தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனின் முடிவு இதுதானா? மனிதன் கர்த்தரால் சிருஷ்டிக்கப்பட்டவன்; கர்த்தரைத் துதிக்கவும், போற்றவும், மகிழ்ந்து வாழவும் சிருஷ்டிக்கப்பட்டவன். அவன் உருவாக்கப்பட்டபோது மரணம் என்பது அவன் நெற்றிப்பட்டையில் எழுதப்படவே இல்லை! என்று, மனிதன் கர்த்தர் கொடுத்த தெரிந்தெடுக்கும் சக்தியை துர்ப்பிரயோகம் செய்தானோ, அன்று, மனிதன் கர்த்தரின் சமுகத்தை இழந்தான்; அன்று, அவனது வாழ்க்கை ஒரு வரம்புக்குள் வந்துவிட்டது!

‘‘நீ மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்’’ என்று கர்த்தர் பாவம் செய்த ஆதாமைப் பார்த்துக் கூறியதை ஆதியாகம புத்தகம் 3வது அதிகாரம் 19வது வசனம் குறிப்பிடுகின்றது.

**ஒரு குழந்தையின் பிறப்பு மகிழச் செய்கின்றது; ஒரு மனிதனின் இறப்பு மனிதரைத் திகைக்கச் செய்கின்றது!**

பாவம் தந்த பரிசு மரணம் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. மரணத்திலிருந்து மனிதர் விடுவிக்கப்படுவதற்கு முதலாவது பாவத்திலிருந்து விடுதலை பெற்றாகவேண்டும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மனிதனின் பாவத்திற்காக சிலுவையில் தம் சொந்த இரத்தத்தைச் சிந்திய நாளில் மனிதருக்கு பாவத்திலிருந்து முற்றிலுமாக விடுதலை கிடைத்தது.

அந்த ஜீவ இரத்தத்தில் அடைக்கலம் பெற்ற அனைவருக்கும் மரணம் என்பது இல்லை என்பதைத் தெரிவிக்கும் நாள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாள் ஆகும்.

“ஆண்டவராகிய கர்த்தரால் மரணத்திற்கு நீங்கும் வழிகளுண்டு” என்று நீதிமொழிகள் 12வது அதிகாரம் 28வது வசனம் முன் தெரிவித்தது. அந்தப் பாதை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழும்பிய நாளில் நமக்குக் கிட்டியது.

‘‘அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்; கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையைப் பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்; கர்த்தரே இதைச் சொன்னார் என்று ஏசாயா 25வது அதிகாரம் 8வது வசனம் கூறியது. அதுவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழும்பிய நாளில் நிறைவேறியது.



மரணம் என்பது கொடுமையிலும் கொடுமையானது! ஒருவராலும் தாங்கமுடியாதது! மனிதர் மனதில் ஓடும் பெரும் பயம் மரண பயமே ஆகும். மரண பயத்தில் இருந்தும், மரணத்தின் பிடியிலிருந்தும் மனிதர்களை விடுவிக்கவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்.

> "அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்; மரணமே, உன் வாதைகள் எங்கே? பாதாளமே உன் சங்காரம் எங்கே? மனமாறுதல் என் கண்களுக்கு மறைவானதாயிருக்கும்" என்று ஓசியா தீர்க்கதரிசியின் புத்தகம் 13வது அதிகாரம் 14வது வசனத்தில் கூறினார். அந்த மூன்று நாள் அனுபவத்தை பரதீசின் அனுபவம் என்று தன் அருகில் தொங்கிய கள்ளனுக்கு கற்றும் கொடுத்தார்.

மனிதர்கள் மரித்தவுடன் இடம்பெறும் மூன்று படிகள் உயிர்த்தெழுந்த நாளில் முற்றிலும் தெரிவிக்கப்படுகின்றது.

### முதல் படி:

நமது வாழ்க்கையில் கடைசி மூச்சு விடும் நேரம் ஆகும். "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" என்று பரிசுத்த யோவான் 11வது அதிகாரம் 25வது வசனம் கூறியபடியே, இந்த உலகத்தை விட்டுப் பிரியும் விசுவாசமுள்ள மனிதன் பிரவேசிக்கும் முதல் படி பரதீசு என்ற இடமாகும்.

பரதீசு என்ற வார்த்தையின் சரியான பொருள் 'தோட்டம்' என்பதாகும். ஏதேன் தோட்டம் என்பதை பரதீசு என்றே ஆதியாகமம் 2வது அதிகாரம் 8 முதல் 10 வசனங்கள் அழைக்கின்றன. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தத்தில் அடைக்கலம் பெற்ற அனைவரும் தங்கள் அந்திம நேரத்தில் தேவ தூதர்களால் இந்த அழகிய தோட்டத்திற்கு வழிநடத்தப்படுவார்கள் என்பதே முதல் படி!

**மரண பயத்தில் இருந்தும், மரணத்தின் பிடியிலிருந்தும் மனிதர்களை விடுவிக்கவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்தார்.**

### இரண்டாம் படி:

அந்த அழகிய தோட்டத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூன்று நாள் தங்கி இருந்தது போன்று, பின்பு உயிர்த்தெழுந்தது போன்று, நாமும் பரதீசில் நமது உயிர்த்தெழும்பும் நாள் வரைக்கும் தங்கியிருப்போம்!

சகல பரிசுத்தவான்களுடன் உயிர்த்தெழும்பும் நாள் வருவதற்காகக் காத்திருக்கும் இடமான பரதீசில் தங்கியிருப்போம்!

### மூன்றாம் படி:

உயிர்த்தெழும்பும் நாள் ஆகும். அந்த நாள் என்று வரும் என்று பரதீசில் உள்ளவர்களுக்கும், பூலோகத்தில் வாழ்கின்றவர்களுக்கும் தெரியாது என்று பரிசுத்த வேதம் கூறுகின்றது. கர்த்தர் ஒருவரே அந்த நாளைத் திட்டம்செய்கிறவர், அந்த நாள் திட்டம் செய்யப்படும் வேளையில் உலகம் அற்றம் காணும்; அந்த உயிர்த்தெழும்பும் நாளில் ஆவி சரீரத்துடன் சேர்ந்துகொள்ளும்.

மனிதனின் சரீரம் மண்ணில் புதைக்கப்பட்டிருந்தாலும், தீயில் எரிக்கப்பட்டிருந்தாலும், கடலில் கரைக்கப்பட்டிருந்தாலும் சரீரம் கூட்டப்படும்; ஆவி இணைக்கப்படும்; மனிதர் அனைவரும் அந்த நாளில் உயிரோடு உயிர்த்தெழும்புவார்கள். அவர்கள் அனைவருக்கும் கடந்த கால வாழ்க்கையின் ஞாபகம் இருக்கும்.



கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய ஜீவ இரத்தத்தில் விசுவாசம் வைத்து, பாவ மன்னிப்பு பெற்ற அனைவரும் உயிர்த்தெழும்பும் நாளில் பெற்றுக்கொள்ளும் சரீரம் 'மகிமையின் சரீரம்' என்று அழைக்கப்படும். அதுவே சிருஷ்டிப்பின் நாளில் மனிதன் பெற்ற சரீரமாகும். அந்த சரீரத்தில் பாவ நோக்கங்கள் இருப்பது இல்லை, தேவ தூதரைப் போல் இருப்பார்கள் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறினார்.

மூன்றாவது படியான உயிர்த்தெழும்பும் நாள் பரலோக பாக்கியத்திற்கு எடுத்துச் செல்கின்றது. பரிசுத்த யோவான் 3வது அதிகாரம் 31வது வசனத்தின்படி பரலோகத்திலிருந்தே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பூலோகத்திற்கு வந்தார். பூலோகத்தில் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த பின்னர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரலோகத்திற்கே திரும்பவும் சென்றார் என்று அப்போஸ்தலர் முதல் அதிகாரம் 11வது வசனம் கூறுகின்றது. அதே போன்று பிரியமானவர்களே, நாமும் உயிர்த்தெழுந்த பின்னர் பரலோகத்திற்கே செல்லுவோம்!

பரிசுத்த யோவான் 14வது அதிகாரம் 1 முதல் 3 வசனங்கள், 2 கொரிந்தியர் 5வது அதிகாரம் முதல் இரண்டு வசனங்கள் கூறுவது போன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய ஜீவ இரத்தத்தில் அடைக்கலம் பெற்றவர்கள் இறுதிப் படியாக சந்திக்கும் இடம் பரலோக பாக்கியமே ஆகும்.

- மரண வேளையில் தேவதூதர்களால் வரவேற்கப்பட்டு, பரதீசுக்கு வழிநடத்தப்படுவதே முதல் படி ஆகும்.
- உயிர்த்தெழும்பும் நாள் வரைக்கும் பரதீசில் பரிசுத்தவான்களுடன் தங்கியிருப்பதே இரண்டாவது படி ஆகும்!
- உயிர்த்தெழும்பும் நாளில் மகிமையின் சரீரம் பெற்று, பரலோகத்தில் என்றும் கர்த்தாவுடன் வாழும் பாக்கியமே மூன்றாவது படி ஆகும்.

**பாவ மன்னிப்பு பெற்ற அனைவரும் உயிர்த்தெழும்பும் நாளில் பெற்றுக்கொள்ளும் சரீரம் 'மகிமையின் சரீரம்' என்று அழைக்கப்படும். அதுவே சிருஷ்டிப்பின் நாளில் மனிதன் பெற்ற சரீரமாகும்.**

**இதுவே உயிர்த்தெழும்பும் நாள் தரும் பரிசு ஆகும்!**

**அறிவினாலும், ஆராய்ச்சியினாலும் அறிந்துகொள்ள முடியாத அதிசயம் இது!**

**அனுபவித்துப் பார்க்காமல், புரிந்துகொள்ள முடியாத அற்புதம் இது!**

**கேள்விக்கு மேல் கேள்வி கேட்பதினால் புரிந்துகொள்ள முடியாத சத்தியம் இது!**

**விசுவாசிக்கிறவர்கள் அனைவருக்கும் கொடுக்கப்படும் ஆசீர்வாதம் இது!**

இந்த ஆசீர்வாதம் விரும்பும் அனைவருக்கும் உண்டு! கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது ஜீவனைக் கொடுத்த சிலுவையில் உண்டு! சிலுவை வரை வருகின்றவர்களை இந்த மூன்று படிகளிலும் கைபிடித்து வழிநடத்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து காத்துக்கொண்டு இருக்கின்றார்.

*ஒரு தகப்பனுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் தாய், தகப்பன் இருவருக்கும் சற்றும் கீழ்ப்படியாத மகன். ஒரு நாள் அவன் வீட்டில் பணத்தைத் திருடிக்கொண்டு வீட்டைவிட்டே ஓடிவிட்டான்!*



*என் மகன் எத்தனை கெட்டவனாக இருந்தாலும், அவன் என் மகனே! என்று தகப்பன் அங்கலாய்த்தான்!*

*என் மகன் திரும்பி வீட்டிற்கு வரவேண்டும் என்று தகப்பன்*

மனதில் யோசித்துக்கொண்டே இருந்தான். பல நாட்கள் சென்றன! ஒரு நாள் வீட்டிற்கு ஒரு கடிதம் வந்தது. தகப்பன் அந்தக் கடிதத்தைத் திறந்து படித்தான் தன் மகனிடம் இருந்து, முகவரியுடன் வந்த கடிதம் என்று கண்டான், வாசித்தான்.

''அன்புள்ள அப்பா, என்னை மன்னியுங்கள், வீட்டிற்குத் திரும்பி வர ஆசைப்படுகின்றேன். என்னை ஏற்றுக்கொள்வீர்களா?

அப்பா, நான் களவுசெய்த காசுகளை மன்னிப்பீர்களா? என்னிடம் கொஞ்ச காசுகள் மீதி உண்டு. வீட்டிற்கு வரும் வரை இரயிலில் டிக்கட் எடுக்க போதுமான காசுகள் இல்லை. நீங்கள் என்னை மன்னிப்பீர்கள் என்றால் வீடு வரை வருவதற்கு காசு அனுப்புங்கள்'' என்று எழுதியிருந்தான்.

அவனது தகப்பன் அவனுக்குப் பதில் எழுதினான்.

''எங்கள் அன்பு மகனே, உன்னை நாங்கள் எல்லோரும் மன்னிக்கிறோம். உன் கையில் கொஞ்ச காசு இருக்கிறது என்றாய். அந்த காசில் குறிப்பிட்ட ஊர் வரை இரயிலில் டிக்கட் எடுத்து நீ வந்துவிடு! அந்த ஊர் இரயில் நிலையத்திற்கு அப்பா வருவேன்; உன்னைச் சந்திப்பேன்; வீட்டிற்கு அழைத்துச் செல்வேன் என்று பதில் எழுதினான்.

**நீ சிலுவை வரை வந்துவிடு! உன்னை அங்கே நான் சந்திப்பேன். பரலோகம் வரை உன்னை நடத்திச் செல்லுவேன் என்பதே உயிர்த்தெழும்பிய நாளில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தரும் அழைப்பு**

மகனும் அப்படியே செய்தான். தகப்பனும் அப்படியே செய்தான். மகன் கையில் இருந்த காசுகளை வைத்து எவ்வளவு தூரம் வரமுடியுமோ அவ்வளவு தூரம் வந்தான்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உயிர்த்தெழும்பிய நாள் தரும் ''மனிதனுக்கு மரணம் இல்லை'' என்ற ஆசீர்வாதத்தை அனுபவிக்க ஆசைப்படுகிறவர்கள் செல்லவேண்டிய தூரம் ஒன்று உண்டு. அது உங்களுக்கும் சிலுவைக்கும் உள்ள தூரம் ஆகும்.

சிலுவையில் கர்த்தராகிய இயேசு காத்து நிற்கின்றார்;

வருகிறவர்களைக் கைபிடித்து நித்தியம் வரை நடத்துவார்.

என் மகனே, என் மகளே, நீ எவ்வளவு சீர்கெட்டுப் போயிருந்தாலும் என்னை விட்டு எத்தனை தொலைவாக நீ சென்றுவிட்டாலும் உன்னை மன்னிக்கவே சிலுவையில் என் ஜீவனைக் கொடுத்தேன்.

நீ சிலுவை வரை வந்துவிடு! உன்னை அங்கே நான் சந்திப்பேன். பரலோகம் வரை உன்னை நடத்திச் செல்லுவேன் என்பதே உயிர்த்தெழும்பிய நாளில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தரும் அழைப்பு ஆகும்.

நாம் நமது பங்கை நிறைவேற்றினால், சிலுவை வரை சென்றால், உலகத்தில் வாழும் சகல நாட்களும் சமாதானம்! சந்தோஷம், வெற்றி என்பது உங்கள் பங்காகும்.

மரண வேளையில் தேவ தூதர்களின் வரவேற்பு
பின்னர் பரதீசில் பங்கெடுப்பு!
பின்னர் உயிர்த்தெழும்பும் நாளில் மகிமையின் சரீரம்!
பரலோக பாக்கியம்! ஓயாத அல்லேலூயா! ■



# மரணம் என்பது மங்களம்

- திருமதி ரதி ஆசீர், மதுரை



"அவனுடைய ஊழியத்தின் நாட்கள் நிறைவேறினவுடனே
தன் வீட்டுக்குப் போனான்" லூக்கா 1:23

தன் வீட்டுக்குப் போன எமில் அண்ணனின் வாழ்க்கை சரித்திரம் பொன் எழுத்தில் பதிக்கப்படவேண்டிய வரலாற்று சரித்திரம்! எமில் என்றால் தமிழ்! ஜெபசிங் – ஜெபசிங்கம்!

72 ஆண்டுகளுக்கு முன் பெற்றோரிட்ட பெயருக்கேற்ப, தமிழ்ப் பற்று மிக்க ஜெபவீரராகத் திகழ்ந்தார் 'எமில் அண்ணன்'. ஆம், 8 வயதுக் குழந்தைமுதல் 80 வயது மூதாட்டி வரை அனைவருக்கும் அவர் 'அண்ணன்'தான். சகோதர பாசமிகு, நேசமிகு அண்ணன்!

வாழ்க்கை மொட்டுவிடும் பருவமாம் இளமை பருவத்திலே, பதினேழாவது வயதினிலே, இலட்சியங்களின் இலக்கை நோக்கி, இலக்குகளின் வானம்தொட, விசுவாசமெனும் சிறகடித்துப் பறந்தார்கள். மாபெரும் தரிசனம் பெற்றவர்களாக, அந்த தரிசன தேரோட்டத்திற்கு உத்வேகமாக முழங்கால்களை மூலதனமாக்கினார்கள். அவர்களது ஊழியப் பயணத்தின் உந்துவிசை முழங்கால் ஜெபம் மட்டுமல்ல, வேதவாசிப்பும் முழங்கால்களிலேயே!

1982ல் தூத்துக்குடியில் ஒரு லெந்துகால கன்வென்ஷன் கூட்டத்தில் அண்ணனது உள்ளம் உருக்கும் தேவச்செய்தியால் தொடப்பட்டு, என் கணவர் முழங்காலில் நின்று வேதம் வாசிக்க, வெகுவிரைவில் வேலை ஸ்தல நெருக்கடிகள் நீங்கி, தடைபட்ட ஆசீர்வாதங்கள் அனைத்தும் கிட்டியது! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அதிலிருந்து விஷ்வவாணி ஊழியத்திற்கு காணிக்கை அனுப்ப ஆரம்பித்தோம், தொடர்ந்தோம், தொடருகிறோம், பிள்ளைகளும் தொடருகிறார்கள்!

முன்னொரு நாள் உண்டியல் பெட்டி தர வந்த ஊழியரிடம் வேண்டாமென்று மறுத்த எங்களுடன் தேவன் இடைபட, விஷ்வவாணி ஊழியத்தில் ஓர் அருட்பணியாளரை தாங்கவும் முன்வந்தோம். 1984ல் விஷ்வவாணியின் முதல் ஊழியரைத் தாங்கியது எங்கள் குடும்பம் என்பதை மிகத்தாழ்மையுடன் கூறுவதில் தேவனுக்குள் மகிழுகிறேன். எங்களுக்கும் அன்றிலிருந்து தொடங்கியது அருட்பணி பயணம். சென்னைக்கு அருகிலுள்ள பொன்னேரி ஆலயத்தில்வைத்து நடைபெற்ற ஊழியர் பிரதிஷ்டை வைபவத்திற்கு எமில் அண்ணன், செல்வராஜ் அண்ணன், சகோ. பூமி நாதன் முதலிய விஷ்வவாணியின் மூத்த தலைவர்கள் அனைவரும் வந்திருந்தது எங்களுக்கு ஆனந்த சந்தோஷம். சுமார் 15 பேருக்கு மட்டுமே ஆகாரம் சமைத்திருந்தேன். வந்தவர்களோ 30க்கும் மேல். திகைத்து, தடுமாறி போனேன். சிறுவன் கை சிற்றுண்டி இயேசுவின் கை பட்டு பெருங்கூட்டத்தை திருப்தியாக போஷித்ததுபோல், எங்கள் சிறிய இல்லத்திலும் குறைவின்றி அனைவரும் அன்று புசித்ததுமின்றி, சாப்பாட்டையும் பாராட்டி சென்றனர். ஆனால் எமில் அண்ணன் வெளித்திண்ணையில் அமர்ந்து, ரசித்து சாப்பிட்டதோ ரசம் சாதம்தான்! அண்ணன் அவர்கள் ஆடையிலும் எளிமை, ஆகாரத்திலும் எளிமை! அன்று பொன்னேரி ஆலயத்தில் அண்ணன் ஆற்றிய செய்தி இன்னும் என் இதயத்தில் பசுமையின் நினைவுகளாய் நிற்கின்றது.

"உங்களது ஜெபத்தை நம்பி, ஒரு ஊழியரை கிணற்றில் இறக்குகிறதுபோல், வட இந்திய ஊழியத்திற்கு, ஆபத்தான பணித்தளங்களுக்கு அனுப்புகிறோம். நீங்கள் அனைவரும் வெளியே நின்று, ஜெபம் எனும் கயிறுகளால் அவர்களைத் தாங்கிப் பிடித்துக் கொள்ளுங்கள்''. ஆம்! அண்ணனின் வாஞ்சையை நிறைவேற்றுவோம், ஊழியங்களுக்காய் ஜெபித்து, ஈகைதனை அர்ப்பணிப்போம்!



சிகரத்தை நோக்கி நடைபோடும்பொழுது அநேக தடைகள் வருவதுண்டு. எமில் அண்ணன் அவர்கள் தடைக் கற்களை வெற்றிப்படிக்கட்டுகளாக்கி, எட்டெடுத்து ஏறி, அற்ப ஆரம்பமான விஷ்வவாணி ஊழியத்தின் அற்புத சிற்பியானார்கள். அர்ப்பண பணியில் தழும்புகளும் உண்டு, வடுக்களும் ஏராளம் உண்டு!

என்றாலும், இயேசு கிறிஸ்துவின் அச்சடையாளங்களை தரித்தவர்களாக ஊழியப் பாதையில் உயரம் தொட்டார்கள்.

அவர்களது எழுதுகோலின் ஒரு துளி மையிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையும், பல்லாயிரக்கணக்கானோரை சிந்திக்கவைத்து, ஊழியத் தேவைகளை சந்திக்கவைக்கிறது. செய்தி வேளைகளில் அவர்களும் கண்கலங்கி, நமது விழிகளையும் ஈரமாக்கிவிடுவார்கள்! அனல் பறக்கும் செய்தியினால் இதயங்கள் கொழுந்துவிட்டு எரிந்து, மெழுகாய் கரைந்து, ஊழியப் பாதையைப் பிடிக்கும். உள்ளமுருக்கும் பேச்சு உள்ளங்களை கட்டிப்போட்டுவிடும்!

பிரசங்க மேடைகளில், நாற்காலியில் கெம்பீரமாய் உட்காருவது என்பது அவர்களது சரித்திரத்தில் கிடையாது. மேடையைவிட்டு இறங்கி, கீழே தரையில் இருகால்களையும் மடக்கி, தலை தாழ்த்தி அமர்வதே அண்ணனது தனித்துவ பாணி - தாழ்மையின் பண்பு! அண்ணனைப்பற்றி முழுவதும் எழுத இப்பத்திரிகையின் பக்கங்கள் போதாது!

விஷ்வவாணியின் தேசீய முகாம் செகந்திராபாத்தில் 13-16, ஜனவரி 1994ல் இடம்பெறுகையில், நாங்களும் கலந்துகொண்டோம். சாது சுந்தர்சிங் அவர்களைப் பற்றி "இளந் துறவி" என்ற சரித்திர நாடகம் சகோ. எமில் ஜெபசிங் அவர்களால் எழுதப்பட்டு, அதன் முதல் பிரதியை 15-1-1994 அன்று அண்ணன் அவர்களின் கரங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் பாக்கியத்தை எனக்குக் கொடுத்து, ஆயிரக் கணக்கானோர் கூடியிருந்த திரள் கூட்டத்தில் என்னைப் பற்றி பகிர்ந்துகொண்டு, அப்புத்தகத்தை என்னிடம் தந்தார்கள். உணர்ச்சி பெருக்கினால் உள்ளம் சிலிர்க்க நனைந்த விழிகளுடன் 'இளம் துறவி'யைப் பெற்றுக்கொண்டேன். அதின் உள் பக்கத்தில் எமில் அண்ணனே அநேக வரிகளை எழுதி, கையெழுத்திட்ட அந்த முதல் பிரதி இன்றும் என்னிடம் பத்திரமாக உள்ளது. எங்கள் மகன் திருமணத்திற்கு அவர்கள் அனுப்பிய ஆசீர்வாத வாழ்த்துச்செய்தி மடல், மற்றும் திருமதி. ஆனந்தி ஜெபசிங் அவர்கள் நடத்தும் பள்ளியில் எங்களை வரவேற்று எழுதிய வாழ்த்து அட்டையையும் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். டில்லி அலுவலகத்தில் குடும்பமாய் அண்ணனை சந்தித்து, அண்ணனுடன் பேசி பழகும் வாய்ப்பு பெற்றதும் பெரும்பாக்கியம்.

சில வருடங்களுக்கு முன் மதுரை - கதீட்ரல் ஆலயத்தின் விஷ்வவாணி கூடுகையில் அண்ணன் எங்களை சந்தித்து, 'அக்கா, உங்கள் எழுத்துக்கள் அருமையாக இருக்கிறது, சமர்ப்பணில் தொடர்ந்து எழுதுங்கள்' என்று அனுமதி தந்தது என்றென்றும் என் சிந்தையில் மோதும் சிறப்பு வார்த்தைகள்! அதுதான் எமில் அண்ணனுடன் எங்கள் இறுதியான இனிமையான சந்திப்பு. மரணம் பூவுலகில் இழப்பு, பரலோகிலோ சேமிப்பு! 'இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை.' வெளி. 7:16

எமில் அண்ணன் விட்டுச்சென்ற உன்னத பணியினை தொடர்ந்து செய்ய சிறந்த வாய்ப்பும், திறந்த வாசலும், 2020க்குள் ஒரு லட்சம் கிராமங்கள் சுவிசேஷத்தினால் சுபீட்சம் காணவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கிருபை தருவாராக!

## விவரிக்க வார்த்தைகள் இல்லை

**"அகில உலக வானொலியில் பணிசெய்யும்பொழுது அவரை அறிவேன். வானொலி ஊழியத்தை இந்திய தேசத்தில் நிலைநாட்ட சகோதரன் எமில் எடுத்த பிரயாசங்கள் வார்த்தையில் விவரிக்க முடியாதவை. இந்திய தேசத்தின் ஜனங்களைச் சந்திக்க ஓர் ஊழியம் பிரயாசப்படுகிறது என்று சகோதரன் எமில் அறிந்தால், அது யாருடைய ஊழியமாக இருந்தாலும் சரி, அவர்கட்கு தன்னால் இயன்ற மட்டும் உதவ எமில் அவர்கள் பிரயாசம் எடுப்பார். சகோதரன் எமிலை பரலோக வாசலில் அவர் ஆத்ம நேசர் இயேசுவும், அநேக இந்தியர்களும் வரவேற்றிருப்பார்கள் என்று எண்ணும்பொழுது பூரிக்கின்றேன்."** - பர்டன் ஜே. ரீட்



# அன்பின் அடிச்சுவடுகள்

நாளிதழ் ஒன்று "மிகவும் விலையுயர்ந்த பரிசுகள்" என்ற தலைப்பில் பல பரிசுப் பொருட்களை பட்டியலிட்டிருந்தது. 1/2 கிலோ காபி கொட்டைகள் ரூ. 31லட்சம், கண்ணாடியிலான பந்தாடும் விளையாட்டு மேசை ரூ. 43 லட்சம், தங்க முலாம் பூசிய தூசகற்றும் கருவி ரூ. 6 கோடி... இதைப் பார்க்கும் பொழுது, இப்பரிசுகளை வாங்கும் மனிதர்கள் அவர்கள் நினைத்த யாவையும் வாங்க பிரயாசமெடுப்பார்கள் என்பது புலனாயிற்று. வானமே அவர்கள் எல்லை!


ஆனால் பவுல் ஓர் மேன்மையான இரகசியத்தை அறிந்திருந்தார். தேவ பிள்ளைகளின் எல்லை வானத்தையும் தாண்டும், அதன் காரணி நாமல்ல, இயேசுவே! ஆகையால் தான் எபேசு சபைக்கு நிலையான உண்மையை பற்றி பவுல் எழுதினார்: 'தேவன் நம்மேல் வைத்திருக்கும் அன்பு நித்தியமானது, அளவிட முடியாதது'.

நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென். எபேசியர் 3:20,21.


தேவ பிள்ளைகளாக நாம் அறிந்துகொள்ளவேண்டியது: 'மிஞ்சி ஆண்டவரிடத்தில் கேட்கக் கூடாது' என்பதே. நீங்கள் ஓர் நீண்ட ஜெபம் செய்து அண்ட சராசரங்களின் எல்லாப் பொக்கிஷங்களையும் கேட்டாலும் தேவன் உங்களுக்காக செய்யவேண்டும் என நினைத்த காரியங்களை ஒப்பிடுகையில் அவை வெறும் தூசியே. நீங்கள் எவ்வளவு ஜெபித்தாலும், எவ்வளவு கற்பனை செய்தாலும் சரி, அதற்கு மேலாக தேவன் செய்ய வல்லவர். ஆனால் இவ்வகை அநந்த ஞானத்தோடு நாம் அநேகமுறை வாழ்வதில்லை. விசுவாச வீரர்களை நாம் ஏதோ விசேஷ வரம் பெற்றவர்கள் என்றே நினைக்கிறோம். "விசுவாச வீரர்கள் யாவரும் சாதாரண மனிதர்களே! தேவன் தங்களோடு இருக்கிறார் என்ற திட விசுவாசத்தினாலேயே அசாதாரணமான காரியங்களைச் சாதித்தனர்" என்றார் ஹட்சன் டெய்லர். நாம் நினைக்கிறதற்கும், வேண்டிக்கொள்வதற்கும் மேலாக தேவனுடைய கொள்திறன் மிக மிக அதிகம்!

நாம் பேராசை பிடித்தவர்களோ என தேவபிள்ளைகளுக்கு ஒருவேளை எண்ணத் தோன்றும். அவ்வாறன்று! இக்கண்ணோட்டத்தில், தேவனுடைய விஸ்தாரமான அன்பு புலப்படும். தேவன் நம்மேல் வைத்த அளவிடமுடியாத அன்பை பவுல் உணர்ந்திருந்தார். எபேசியர் நிருபத்தின் கடைத் தொகையை எழுதும் முன் அவர் தேவனின் அளவிட முடியாத கொடுக்கும் திறனைக் குறித்து "... கிறிஸ்துவின் அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து... (எபே. 3:18)" என தேவனின் அன்பை உணரும்படி எழுதுகிறார். பவுல் உத்வேகத்தோடு அறிகிறதற்கு மிகவும் கடினமான 'அளவிட முடியாத அன்பு' என்னும் கிரேக்க சொல்லை (அகாபே) தன்னால் இயன்ற வரை இவ்வசனத்தின் மூலம் எழுதுகிறார். இந்த நித்தியமான, அளவிடமுடியாத தேவனின் அன்பே நம் கிறிஸ்தவ வாழ்வின் வேராகவும் அஸ்திபாரமாகவும் இருத்தல் வேண்டும்.

தேவ அன்பும் பெருந்தன்மையும் நம்மை தேவ வித்துக்களாய்ப் பிரதிபலிக்க செய்கின்றன. தேவன் மீதும் பிறர் மீதும் கொண்ட அன்பு நம்மை நெருக்கி, தேவ சந்நிதியில் ஜெபிக்க ஏதுவுண்டாக்குகிறது. நாம் நினைப்பதற்கும் வேண்டிக் கொள்வதற்கும் அதிகமாக தருபவர், அவர் ராஜ்யத்தைக் கட்டும் பொக்கிஷங்களைத் திறந்துதருகிறார். மிக எளிமையான பலவீனமான வில்லியம் கேரி, ஹட்சன் டெய்லர் மற்றும் எமில் அண்ணன் ஆகியோர் இந்த இரகசியத்தை உணர்ந்து, விசுவாசித்து, சாதித்து நமக்கு அடிச்சுவடுகளை பின்வைத்துப் போனார்கள். இப்பொழுதோ இது நம் தருணம்! தேவனுடைய ராஜ்யத்தின் வளர்ச்சிக்காக நாம் நினைக்கிறதற்கும் வேண்டிக்கொள்வதற்கும் அதிகமாக தேவன் தருவார் என விசுவாசித்து முன்செல்வோம். நம் பிள்ளைகள் பின்பற்றும்படி அடிச்சுவடுகளைப் பதிக்க இதுவே தருணம். இது நம் வேளை! பயன்படுத்துவோமா? கிறிஸ்துவின் குடும்பத்திலிருந்து சாலினி ஜெபசிங் பட்ராஸ்



# மனிதரைத் தேடிய மா மனிதர்



**மனிதர்கள் பிறக்கின்றார்கள் மரிக்கிறார்கள்... ஆனால் மா மனிதர்கள் எப்போதாவது தான் எழுகிறார்கள். அவர்களுக்கு மரணம் இல்லை.**

வரலாறு மா மனிதர்களால் நிறைந்து கிடக்கிறது. அதின் ஒவ்வொரு பக்கங்களிலும் அவர்கள் உயிர்த்துடிப்புடன் மின்னுகிறார்கள்.

மனிதர்கள் வரலாற்றைப் படிக்கிறார்கள். மா மனிதர்கள் வரலாற்றைப் படைக்கிறார்கள். மனிதர்கள் உலகத்தால் இழுக்கப்படுகிறார்கள். மா மனிதர்கள் உலகத்தையே தங்கள் பக்கமாய் இழுக்கிறார்கள். மனிதர்கள் தங்களுக்கானவற்றையே திட்டமிடுகிறார்கள். மா மனிதர்கள் திட்டங்களையே தங்களுடையதாக்குகின்றனர். மனிதர்கள் வாசிக்கிறார்கள். மா மனிதர்கள் வாசிக்கப்படுகிறார்கள்! மனிதர்கள் கடவுளைத் தெரிந்தெடுக்கிறார்கள். மா மனிதர்களைக் கர்த்தர் தெரிந்தெடுக்கிறார்!

ஒரு மாலை உரையாடலின்போது, நண்பர் ஒரு பாடலைத் தற்செயலாக முணுமுணுத்தார். இசை இலக்கணத்தின்படி அது 'மைனர் ஸ்கேலின்' ஆறாவது ஸ்வரத்திலிருந்து துவங்கியது. பெரும்பாலும் அப்படி துவங்கமுடியாது. ஒன்று அதிகம் இசை கற்றிருக்க வேண்டும் அல்லது அதீத ஞானம்வேண்டும். பாடல் யாருடையது என்று அவரிடம் கேட்டேன். இன்னொருவரைச் சுட்டிக்காட்டி, நேற்று அவர் பாடிக்கொண்டிருந்தார், அவரிடமிருந்து கற்றுக்கொண்டேன் என்றார். அவரையும் சந்தித்தேன். பாடல் நன்றாக இருக்கிறது எப்படி கம்போஸ் செய்தீர்கள் என்றேன். அது என் பாடல் அல்ல, எமில் ஜெபசிங் அண்ணனின் பாடல் என்றார். அன்றுமுதல் எமில் ஜெபசிங் என்ற மா மனிதரைச் சந்திக்கவேண்டும் என்ற ஆவல் உருவானது. 1992ம் ஆண்டு தென் தமிழகத்தில் நடந்த கூட்டமொன்றில் மிகத் தொலைவிலிருந்து அவர்களைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. வெள்ளை நிற உடைகள், கனத்த கைகள், கணீரென்ற குரல், பெரிய வேதாகமம் சகிதம் முழங்கிக் கொண்டிருந்தார்கள். செய்தியின் முடிவில் 'இன்றைக்கு நான் செய்யும் இந்தத் தீர்மானத்தை' எனப் பாடி எல்லோரையும் கரங்களை உயர்த்தச் சொல்லி பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் ஒரு உடன்படிக்கையை உண்டுபண்ணிய விதம் என்னைத் தொட்டது.

பின்பு 2005ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற "பிளஸ் இண்டியா / விஷன் 2020" கூடுகையிலே அமரும் வாய்ப்பு கிடைத்தபோது அண்ணன் அவர்களின் தரிசனத் திட்டங்களை அருகிலிருந்து புரிந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. அந்தக் கூட்டங்களில் வழங்கப்பட்ட கோப்புகளைப் பார்த்தபோதுதான், வயல்களை விடவும் வரப்புகளே பெருகிப்போன இந்தியக் கிறிஸ்தவ சமுதாயத்திற்குள் அன்பின் ஜீவ நதியால் அத்தனை வேற்றுமைகளையும் வேரறுக்க, அவர்கள் ஒரு வாய்க்கால் வெட்டிக்கொண்டிருப்பது தெரியவந்தது! உடைந்து கிடந்த இந்திய சமஸ்தானங்களை ஒன்றிணைத்து பாரதப் பெருந்தேசத்தைக் கட்டமைத்த சர்தார் வல்லபாய் படேல் போல சிதறிக் கிடக்கும் இந்தியக் கிறிஸ்தவ அமைப்புகளை அன்பின் கயிறுகளால் பின்னி ஒரு புதிய எழுப்புதலுக்கு – ஒரு மாபெரும் சுவிசேஷப் புரட்சிக்கு அவர்கள் தயாராகிக்கொண்டிருப்பது புரிந்தது! 2006ம் ஆண்டு ஊடகத்துறையின் பொறுப்புகளை எடுத்துக்கொண்ட பின் நேருக்கு நேர் அவர்களைச் சந்திக்கும், பேசும், பழகும், சிந்திக்கும், சாப்பிடும் வாய்ப்புகளைப் பெற்றேன். ஒவ்வொரு சந்திப்பின் பின்பும், வீடு திரும்பும் வழியில் 'ஒரு சாதாரண மனிதனிடமல்ல, ஒரு மாமனிதரின் தொடர்பிலிருக்கிறோம்' என்ற உணர்வு மேலோங்கத் தவறியதில்லை.



ஒற்றை வரியில் எமில் ஜெபசிங் என்ற பெயருக்கு ஒரு வரையறை எழுத வேண்டுமானால் 'மனிதரைத் தேடிய ஓர் மாமனிதர்' என்று தான் எழுத முடியும். காரணம் ஆத்துமாக்களின் மேல் அவர்களுக்கிருந்த அன்பு. கர்த்தரை நெருங்குவதின் பின் விளைவு ஆத்தும பாரம் என்பதை அவர்களோடு பேசும் ஒவ்வொரு நிமிடமும் உணர்ந்திருக்கிறோம்.

அதிகாலை நான்கு மணிக்கே ஆண்டவர் சமுகத்தில் நிற்கும் விடாப்பிடியான கீழ்ப்படிதல் அவர்களுக்கிருந்தது. விளைவு இறக்கிவைக்க முடியாத ஆத்தும பாரமும் கண்ணீரும்! மலைகளுக்குள்ளும், பள்ளத்தாக்குகளுக்குள்ளும் மனிதர்களைத் தேடிச் செல்லும் திட்டங்களுக்கும் பயணங்களுக்கும் அந்த அதிகாலை கண்ணீரும் ஜெபமுமே காரணமாகியது. அதிகாலையிலேயே ஆண்டவரின் சமுகத்தில் அமர்ந்துவிட்டால் அழுதுவிட்டால் பின் மனிதர்கள் முன் கலங்கவேண்டியதில்லை – கண்ணீர் சிந்தவேண்டியதில்லை என்பது அவர்கள் நிரூபித்துக் காட்டிய உண்மை! வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் கால்களினால் அல்ல முழங்கால்களினால் முன்னேறிக் காட்டியவர்கள்.

தென்னிந்தியாவின் கிழக்குக் கடற்கரையோரம் பரவிக் கிடக்கும் சங்க காலத்துப் புகழ் முத்து நகரில் அருள்திரு. Y.C. நவமணி மற்றும் கிரேஸ் நவமணி என்ற குருவானவர் குடும்பத்தில் பிறந்த பத்துப் பிள்ளைகளில் ஒன்று மட்டும் ஹைபர் ஆக்டிவாகப் பிறந்தது. எமில் ஜெபசிங் என்று பெயரிடப்பட்ட அக்குழந்தையின் பெயருக்குப் பின்னால் இரண்டு காரணங்கள் இருந்தன. வேத விளக்கவுரை அறிஞர் எமில் புரூனர் போல வர வேண்டும் என்பதற்காகவும், ஜெப வீரனாக வரவேண்டும் என்பதற்காக 'ஜெப' என்பதையும் காரணப் பெயர்களாக பெற்றோர் இட்டிருக்கிறார்கள். 'சிங்' என்பது அண்ணனுடைய தந்தையார் காலத்திய மிஷனெரி ஹீரோவான சாது சுந்தர் சிங்கை நினைவுபடுத்தி இட்டிருக்கலாம் என்பது நம் அனுமானம். பெயருக்கேற்றாற்போல் எல்லாப் பிள்ளைகளும் வளர்ந்துவிடுவதில்லை. இந்தப் பிள்ளையும் குறும்புகளோடும் குறுகுறுப்புகளோடும் வளர்ந்தது. பருவம் வந்த பின் பாதை மாறியது. இந்திய தேசத்தின் எல்லா அவலங்களையும் துடைத்தெறிந்து புதிய இந்தியாவை மீட்டெடுக்கும் ஆயுதம் கார்ல் மார்க்ஸின் தத்துவங்களே என்பதில் அதீத நம்பிக்கை கொண்டு தீவிர கம்யூனிஸ்டாக மாறிப்போனது. தந்தையும் தாயும் கர்த்தரின் பிள்ளைகள். மகனோ கம்யூனிசத்தின் பிள்ளை. கம்யூனிசத்திற்காக ஊர்வலங்கள், கூட்டங்கள், பதாகைகள் எழுதுவது என தீவிரத் தோழனாகிப்போனது.

கொள்கைக்காக கொடிபிடித்து, குரல்கொடுத்து வீடு திரும்பும்போது நள்ளிரவாகிவிடும். வீட்டிற்கு வெளியே நார்க்கட்டில், குடிதண்ணீர், இரவு உணவு இருக்கும். எல்லாமும் முடித்து உறங்கியபின் நான்கு கால்கள் முழங்காலிடும்! இரு ஜோடிக் கண்கள் கண்ணீர் சிந்தும்! இயேசுவே, மகனை இரட்சியும் என்று அந்தப் பெற்றோர் நள்ளிரவிலும் மகனுக்கான ஜெபங்களை அழுதுகொண்டே ஆண்டவரிடம் அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

தோழர் எமில் ஜெபசிங் 'உறக்கம் தெளிவோம், உற்சாகம் கொள்வோம்' என கம்யூனிசத்திற்காக எழுச்சிப் பாடல் ஒன்றை எழுதியிருந்தார். ஏகாதிபத்தியத்தைத் தகர்க்கும் வெறியுடனும் ஏழை எளியவர்களுக்கு நிலை உயரவும் முழுத்திறனோடும் முழு மூச்சோடும் ஓடிக்கொண்டிருந்த அந்த 17 வயது நிரம்பிய இளைஞனுக்கான 'வேளை வந்துவிட்டது'.

பாளையங்கோட்டை நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் 'மகிழ்ச்சி' பத்திரிகை ஆசிரியர் ஜீவானந்தம் அவர்கள் வல்லமையான செய்தியைக் கொடுத்துக் கொண்டிருந்தார். கூட்டம் முடிந்தது. வெளியே நின்று கேட்டுக்கொண்டிருந்த தோழர் எமில் ஜெபசிங்கிற்கு எக்கச்சக்கமான சந்தேகங்கள். அத்தனையையும் பொறுமையாகக் கேட்ட பெரியவர் ஜீவானந்தம் வேதவசனங்களின் வழியே சந்தேகங்களை உடைத்தார். நடு இரவு வரை உரையாடல் தொடர்ந்தது. உலகத்தோற்றத்திற்கு முன்பே முன்குறிக்கப்பட்ட அந்த இளைஞர் தன் வாழ்நாளில் முதன்முறையாக



முழங்கால்படியிட்டு தன் பாவங்களுக்காக அழுதார். பெரியவர் ஜீவானந்தம் வேதவசனங்களைக் கூறி அவரை இரட்சிப்பிற்குள் வழிநடத்தினார். நீண்ட நெடிய அழுகையுடன் கூடிய ஜெபத்திற்குப் பின் கம்யூனிச அலைகள் மோதிக்கொண்டிருந்த அந்த இதயத்திற்குள் அன்பின் அலைகள் எழும்பத் தொடங்கியது. தோழர் எமில் ஜெபசிங், சகோதரர் எமில் ஜெபசிங்காக மாறிப்போனார்! 'உறக்கம் தெளிவோம், உற்சாகம் கொள்வோம்' பாடலின் பின்வரிகள் 'கல்வாரி தொனிதான் மழைமாரி பொழியும் நாள் வரை உழைத்திடுவோம்' என்று மாறிப்போனது!

உலகம் தந்துவிடமுடியாத பேரமைதி – உலகம் எடுத்துவிட முடியாத நிம்மதி, புதிய நம்பிக்கையாய் கிடைத்துவிட்ட கர்த்தர், அவரோடு செலவிடுவதால் கிடைக்கும் ஆனந்தம் என மகிழ்ச்சியின் உலகிற்குள் பிரவேசித்துவிட்ட அண்ணனுக்கு அதை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளாமல் இருக்க முடியவில்லை! நேற்று வரை கம்யூனிசத்திற்காக சைக்கிள் மிதித்த கால்கள் இப்போது கர்த்தருக்காய் இரு மடங்கு தயாராய் நின்றது. தகரத்தில் ஒரு மெகா போனை செய்து கொண்டு அதிகாலை நான்கு மணி முதலே கிராமங்களுக்கு அந்த சைக்கிள் விரைய ஆரம்பித்தது. ஊழியம் செய்யவேண்டும் என்ற உந்துதல் ஆனால் எப்படி என்று சரியாய்த் தெரியாத அந்த 17ம் வயதிலும் அற்புதமான வழிமுறை ஒன்றைக் கண்டுபிடித்தார்கள்! ஒவ்வொரு கிராமத்திலும் அதிகாலமே முக்கிய சந்தியில் நின்று கொண்டு கிருபை பொருந்திய வசனங்களை உரக்கச் சொல்லிவிடுவதுதான் அது! வசனங்களைக் கேட்டவர்கள் விழித்து எழுந்து யார் என்று பார்ப்பதற்குள் சைக்கிள் அடுத்த கிராமத்திற்குச் சென்றுவிடும்! கொஞ்ச நாளைக்குள் யார் சொல்லுகிறார்கள் என்பதை விட என்ன சொல்லப்படுகிறது என்பதை மக்கள் கவனிக்கத் தொடங்கிவிட்டார்கள்!

விசுவாச வாழ்வில் விதை முளைத்து இலை கிளர்ந்து நிமிரும் செடிகளைக் கர்த்தர் கைவிடுவதேயில்லை. கொத்துவதற்கும் பிடுங்குவதற்கும் சாத்தான் தீவிரமானாலும், வேலியடைக்கும் தோட்டக்காரர் நமக்கு உண்டு. தொடர்ந்து பெத்தேல் அண்ணாச்சி P. சாமுவேல் உள்ளிட்ட விசுவாச நண்பர்கள் கிடைக்க, தெளிவான சத்தியங்களில் அண்ணன் வேரூன்றினார்கள்.

ஆண்டவரின் அரசைக் கட்டியெழுப்பும் வேலையில் எல்லோருக்குமே 'வேலை' இருக்கிறது. ஆனால் அந்த வேலைக்கு 'ஒதுங்கும்' மனிதர்களிடமிருந்து கர்த்தரும் ஒதுங்கிக்கொள்கிறார். அந்த வேலைக்கென அவர் வலைவீசும்போது 'முன்குறிக்கப்பட்டோர்' பிடிக்கப்படுகிறார்கள். வலையிலும் வழுவிக்கொண்டவர்கள் தூண்டிலில் சிக்கிக்கொள்கிறார்கள்!

கர்த்தரின் வேலைக்காக கரங்களையென்ன, கழுத்தைக்கூட நீட்டுவேன் என வரிந்துகட்டி வேலை செய்துகொண்டிருந்த அண்ணனுக்கு கர்த்தர் ஊழியத்தைக் கொடுத்தார். விடுமுறை வேதாகமப் பள்ளி P. சாம் அண்ணாச்சியின் வழிகாட்டுதலில் தமிழ்நாட்டின் பல கிராமங்களுக்கும் வேனிற்கால விடுமுறை நாட்களில் சென்று சிறுவர்களை ஆண்டவருக்காக ஆதாயப்படுத்துவதுதான் அது.

வேனிற்காலம் மட்டுமல்ல – ஆண்டு முழுவதும், சிறுவர்கள் மட்டுமல்ல – எல்லோரையும், என்றோ ஒரு நாள் அல்ல – எல்லா நாளும், பார்த்து வரும் பார்வையாளர்களாய் அல்ல – தளங்களிலேயே தங்கும் போராளிகளாய் 'அருட்பணியாளர்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டும்' என்று தேவன் சித்தங்கொண்டார்; விளைவு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முதல் முழுநேரப் பொதுக்காரியதரிசியாக பெரும் பொறுப்பைக் கொடுத்தார்!

அநேகத்தின் மேல் அதிகாரியாவதற்குக் கொடுக்கப்பட்ட கொஞ்சத்திலும் உண்மையாயிருக்கவேண்டும்! தகர மெகாபோனில் உண்மையாயிருந்ததற்குக் கிடைத்த மேன்மை ஆசிய பெருநாடுகளின் மிகப்பெரிய ஆன்மிக தகவல் தொடர்பு



மையமான டிரான்ஸ் வேர்ல்டு ரேடியோவை நிர்வகிக்கும் பொறுப்பு! கிராமத்திற்கு மட்டுமே கேட்டுக்கொண்டிருந்த குரல் இப்போது கிராமம் கிராமமாக அலை அலையாக பன்மொழிகளில் பல குரல்களில் கோடிக்கணக்கான உள்ளங்களில் எதிரொலிக்கும் பொன்னான வாய்ப்பைப் பெற்றது!

வானொலியின் சத்தம் ஆலய மணியின் சத்தமாக எதிரொலிக்க பின்தொடர் பணி தேவை! வேத வசனங்களை விசுவாசித்தவர்கள் விசுவாச அறிக்கையையும் சொல்ல வேண்டுமென்றால் அருட்பணியாளர் அவசியம். மாற்றுமொழி பேசுவோரின் இதயமொழியிலேயே இயேசுவை அறிவிக்கும் அருட்பணியாளரும் இருந்துவிட்டால் சுவிசேஷப் பணி சுடர் விடும் தீயாய் மாறும் என்பதை உணர்ந்து ஒரு சுதேசி இயக்கமாக விஷ்வவாணி நற்செய்திப் பணி இயக்கத்தை உருவாக்கினார்கள்! இன்று ஒரு 33 ஆண்டுகளுக்குள் இந்தியரின் இதய மொழிகளிலேயே இயேசுவை அறிவிக்கும் 3 ஆயிரத்து 105 அருட்பணியாளர்கள். மாபெரும் சேனையாய் தளங்களிலே போராளிகளாய் நிற்கிறார்கள், அல்லேலூயா!

வி.பி.எஸ்., நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, நல்ல சமாரியன், டிரான்ஸ் வேர்ல்டு ரேடியோ, விஷ்வவாணி, விஷ்வாசி சங்கதி, கெய்ரோஸ், 'பிளஸ் இண்டியா / தரிசனம்–2020' போன்ற இயக்கங்களில் ஒரு சுவிசேஷ வெறியராக அண்ணன் இயங்கியதற்கு ஒரே காரணம் மட்டுமே உண்டு; அது 'பரலோகத்தை இந்தியர்கள் நிரப்புவார் துதியுங்கள்'' என்ற மகத்தான ஒரு தரிசனத்திற்காகத் தான்! ஜீவப் புத்தகத்தின் பக்கங்களை இந்தியர்கள் நிரப்பவேண்டும் என்பதற்காகத்தான். இந்திய தேசத்தின் எல்லாக் கிராமங்களுக்குள்ளும் சென்றுவிடவேண்டும் என்று அவர்கள் துடித்தது சாத்தானின் கரங்களிலிருந்து இந்தியர்களைப் பிடுங்கிவிட வேண்டும் என்பதற்காகத் தான்! புரட்சிகரமான பாடல்களை எழுதி இந்தியக் கிறிஸ்தவர்களை உலுக்கியதும் அதற்காகத்தான்! வல்லமையான தேவ செய்திகளை வெளிப்படுத்தி அனல்மூட்டியதும் அதற்காகத்தான்! இந்தியாவின் வடிவத்தைப் போல அவர் இதயம் மாறிவிட்டதோ என்று சந்தேகப்படும் அளவிற்கு இந்தியாவையும் இந்தியரையும் தன் மனதில் நிறுத்திய மாபெரும் மனிதர்.


பதினேழு வயதிற்குப் பின் அந்தக் கண்கள் அழுததெல்லாம் இதயம் துடித்ததெல்லாம் இந்தியர்களுக்காகத் தான்! கரங்கள் பற்றிக் குலுக்கியதெல்லாம் அருட்பணியாளர்களைத் தான்! கால்கள் நடந்ததெல்லாம் முழங்காலில் தான். மனம் சிந்தித்துக் கொண்டிருந்ததெல்லாம் மனிதரைத் தேடும் சுவிசேஷத் திட்டங்களைத் தான்! மனிதரைத் தேடிய அந்த மாமனிதருக்கு மிகவும் பிடித்த வசனம் 'அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போல என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்'.

**ஆம். மனிதர்கள் பிறக்கிறார்கள், இறக்கிறார்கள். ஆனால் மாமனிதர்களோ எப்போதாவது தான் எழும்புகிறார்கள். அவர்களுக்கு மரணமில்லை!**

– harisprem@vishwavani.org (Media Dept.)

## மகா மிஷனெரி

"**25 ஆண்டுகளுக்கு முன்பு ''ஆத்மீக யாத்ரா'' நிகழ்ச்சி ஒலிபரப்புக்கு விஷ்வவாணி வானொலியில் வாய்ப்பு தந்தவர்கள்** Dr. **எமில் ஜெபசிங். ''மகா மிஷனெரியாக, பாரம் மிக்க ஊழியத் தலைவராக வாழ்ந்து மகிமைக்குள் பிரவேசித்துள்ள இந்த தேவ மனிதரை மறுபடியும் நித்தியத்தில் சந்திப்போம். பிரதம பேராயர்** The Most Rev. Dr. K.P. **யோகனான், பிலிவர்ஸ் சர்ச் சபையாக ஆழ் துயரத்தில் பங்கெடுக்கிறோம். அண்ணன் குடும்பத்திற்காக, விஷ்வவாணி வீட்டாருக்காக ஜெபிக்கிறோம்.**"



- Rt. Rev. Dr. சாமுவேல் மேத்யூ, பேராயர், சென்னை பெங்களூரு திருமண்டலம்

# அண்ணன் ஓர் அறைகூவல்!

*R. ஸ்டான்லி, Founder - Blessing Youth Mission*

நல்ல எதிர்பார்ப்புடன் பெற்றோர் வைக்கும் பெயர்களுக்கேற்ப அனேக பிள்ளைகள் வளருவதில்லை. எமில் அண்ணனுக்கு "ஜெப"சிங் என்று அவரது அன்புப் பெற்றோர் சூட்டிய பெயர் எவ்வளவு பொருத்தமாயிற்று! மற்ற சில தலைவர்களோடு சேர்ந்து அவர் நிறுவிய மிஷனரி இயக்கத்தின் பெயரும் நண்பர் சுவிசேஷ "ஜெபக்" குழுதானே? இவ்வியக்கத்திற்கு "ஜெபத்தை" உயிர்நாடியாக்க அண்ணன் ஓர் உந்துவிசையாயிருந்தார்.

அண்ணனைக் கிறிஸ்தவ உலகு அவரது தரிசனப் பாடல்களாலேயே அதிகம் நினைவுகூரும். இன்று வெளிவரும் பல பாடல்களில் ஒன்றிரண்டு கருத்துக்களே திரும்பத் திரும்ப வருகின்றன. ஆனால் அண்ணனது பாடல்கள் இறைமாட்சி, பரிசுத்தம், தொழுகை, வேண்டல், தியாகம், சகவுறவுகள், ஆவியானவரின் வல்லமை, இன்னும் இவை போன்ற பல விவிலியக் கருப்பொருட்களை மிஷனரித் தரிசனத்துடன் இணைத்துள்ளன. பெந்தெகோஸ்தேயினரல்லாதோரின் பாடல்கள் பயன்படுத்தப்படாத பெந்தெகோஸ்தே வட்டாரங்களிலும் எமில் அண்ணனின் பாடல்கள் வேரூன்றி விட்டன.

அண்ணனால் நடைமுறையில் பல்வேறு உதவிகள் பெற்றோர் நம் நடுவில் ஏராளம். வேலூர் கிறிஸ்தவ மருத்துவமனையில் அவர் அவதிப்பட்டுக்கொண்டிருந்த வேளையிலும், அதே மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த இன்னோர் ஊழியனுக்காய் ஒரு நிறுவனம் மூலம் ஒரு லட்சம் ரூபாய் பெற்றுத் தந்தார்.

இந்தியாவில் இறைப்பணியாளரும் இயக்கங்களும் இணைந்துவராவிடில் அதிகம் ஒன்றும் சாதிக்கமுடியாது என்பது அண்ணனின் மனதில் ஆணித்தரமாயிருந்தது. இதற்காய் அவர் அறிமுகப்படுத்திய கூட்டு முயற்சியே "BLESS India" எனும் செயல்திட்டமாகும். கடைசியாக நான் அண்ணனை மருத்துவமனையில் சந்தித்தபோது அவர்கள் என்னிடம் சொன்னது: "தம்பி, முதிர்ந்த தலைவர்களாக நாம் ஒரு சிலர் கூடி வந்து ஜெபிக்கவேண்டும்!" உடனே சங்கீதம் 133 எனது நினைவுக்கு வந்தது.

கிறிஸ்தவத்தில் இன்று "உணர்ச்சிவசம்" நிறையவுண்டு; போதுமான அளவு அறுவடைப் பணிக்காய் உழைத்திடவோ இன்னும் "உறக்கம்" தெளியவில்லை, "உற்சாகம்" கொள்ளவில்லை! அருமை அண்ணனின் வாழ்வும் மாள்வும் நமக்கு ஓர் "அறைகூவல்!"

## நெஞ்சுக்கு இனிய அண்ணன்


இயேசுவுக்குச் சிநேகிதனாய், பர்னபாவின் சந்ததியாய் வாழ்ந்தவர்கள் எமில் அண்ணன். 1965 அக்டோபர் மாதம் பண்ணைவிளையில் நடந்த முதல் மிஷனெரிக் கூடுகையில் எனக்கு அண்ணனின் அறிமுகம் கிடைத்தது. 1970 மே 1 அன்று உலகத்து வேலைக்கு நான் முற்றுப்புள்ளி வைத்ததும், சுவிசேஷ ஊழியத்தில் இணைந்ததும் எமில் அண்ணன் மூலம் தேவன் தந்த தெளிவான அழைப்பின் நிமித்தமே! என் நெஞ்சுக்கு இனிய அண்ணன் என் தனிப்பட்ட, குடும்ப மற்றும் ஊழியப் பாதையில் அளித்த ஊக்கம், உதவிகளை என்றும் எண்ணி, கர்த்தரைப் போற்றுகிறேன்.

– R. ஜான் கிருபாகரன், காரியதரிசி,
*Revival Ministry, fmpb*

## அற்ப ஆரம்பம்... முடிவோ சம்பூரணம்!

1980ல் துவங்கிய விஷ்வவாணியின் 'ஊழியரை அனுப்புதல்' எனும் முதற்கட்டப்பணி, 'அறுவடை' யெனும் இரண்டாம் கட்டப்பணி மற்றும் மூன்றாம் கட்டமாகிய 'சபை நிறுவும் பணி'யையும் 30 ஆண்டு கால முழங்கால் ஜீவியத்தால் நிறைவேற்றிவிட்டவர்கள் அண்ணன். அற்பமான ஊழியத்தைத் தேவன் சம்பூரணமாக்கினார். தளத்தின் இலட்சோப புதிய விசுவாசிகள் ஆவியிலே ஆழமாய்ப் பெலப்பட ஜெபிக்கிறேன்.

– M. பாண்டிய ராஜ்,
தூத்துக்குடி.



# என் இதயம் தொட்ட அண்ணன்



2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் என் வேதாகமக் கல்லூரி படிப்பை முடித்து, எங்கோ ஓர் இடத்தில், வேதாகமக் கல்லூரியில் பணி செய்ய என் மனம் வாஞ்சித்தது. ஆனால் தேவ விருப்பமும் அழைப்பும் மாறாகவே இருந்தது.

விஷ்வவாணி ஊழியத்தை அறிந்து பயிற்சி பெற பரமன்கேணியிலிருந்த தியான நிலையத்திற்கு அனுப்பப்பட்டேன். சில நாட்களுக்குள் நான் வீடு திரும்ப திட்டமிட்டு, என் நண்பரிடம் பகிர்ந்துகொண்டேன். அது ஒரு வெள்ளிக்கிழமை. “இன்று மாலை எமில் அண்ணன் சந்தியாவில் செய்தி கொடுப்பார்கள், சந்தியா நேரம் மிக நன்றாக இருக்கும், அதில் பங்கெடுத்துவிட்டு நாளை சென்று விடு என்றார் நண்பர். நானும் சம்மதித்தேன், மாலை நெருங்கியது, கடற்கரையில் விசுவாசிகள் கூட ஆரம்பித்தனர், அலை இரைச்சல்களோடு அங்கு பாடிய பாடல்களும் இனிமைசேர்த்தது. முதல் முறையாக எமில் அண்ணனைப் பார்த்தேன். அவர் முகத்தில் ஒரு பரிசுத்தவானின் தோற்றம்! செய்தியில் அவர்கள் கூறின ஒவ்வொரு வார்த்தையும், குறிப்பாக, “தேவ சித்தமில்லாமல் யாரும் இங்கு இல்லை, கர்த்தர் ஒரு நோக்கத்தோடு உன்னை இங்கு கொண்டு வந்திருக்கிறார், ஆகவே பின்னிட்டு பார்க்காதே’’ என்ற வார்த்தைகள் எனக்காகவே அண்ணன் பேசியது போலிருந்தது. செய்தி முடிந்து, ஜெப வேளையில் என்னை விஷ்வவாணி ஊழியத்திற்குத் தேவன் தெரிந்தெடுத்ததை உணர்ந்தேன். தேவ சித்தத்தை அண்ணன் எனக்குக் காட்டினார்கள். அண்ணனுடைய செய்தி என்னை ஊழியக்காரனாக மாற்றியது. அந்த நாளை, அண்ணனுடைய செய்தியை என்னால் மறக்க முடியவில்லை.

குற்றாலம் கூடுகையின்போது அண்ணன் என்னைப் பார்த்துப் பேசும்போது: தம்பி சமர்ப்பண் பத்திரிகையில் வேத ஆராய்ச்சி எழுதுகிறீர்கள், நன்றாக உள்ளது, இன்னும் அதை எப்படி சிறப்பாக எழுதவேண்டும் என்று எனக்குக் கற்றுத் தந்தார்கள். ஒரு மிகப் பெரிய ஊழியத் தலைவரின் தாழ்மையான வார்த்தைகள் என்னைக் கவர்ந்தது!

2009ம் ஆண்டு நாகர்கோவில் ஹோம் சர்ச்சில் செய்தி கொடுத்துவிட்டு, அனைவரும் கலைந்து சென்றவுடன், தம்பி நாம் கொஞ்ச நேரம் ஆலயத்திற்குள் சென்று ஜெபிப்போமா என்றார்கள், சில நிமிடங்கள் நாங்கள் இரண்டு பேரும் ஜெபித்தோம். இப்படி ஒரு ஜெப வீரரை என்னால் மறக்க முடியவில்லை. அண்ணனோடு ஜெபிக்க எனக்கு தேவன் கொடுத்த வாய்ப்புக்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். அந்த ஜெபத்தின் விளைவினால் இன்று, 11 மிஷனெரிகள் இத்திருச்சபையினரால் விஷ்வவாணி தளங்களுக்குள் அனுப்பப்பட்டுள்ளார்கள்; இன்னமும் அனுப்புவார்கள்.

ஒரு நாள் மாலை கூட்டத்திற்காக அண்ணன் சென்றுகொண்டிருந்த போது, அந்தக் காரில் நானும் இருந்தேன். அப்போது தம்பி உங்களுக்கு திருமணமானதா என்று கேட்டார்கள். நான் ஆம், என் மனைவியை உங்களுக்குத் தெரியும், நீங்கள் தான் டெல்லியில் வைத்து அவளது மேற்படிப்புக்காக ஜெபித்து அனுப்பினீர்கள் என்றவுடன், ஜெபா… என்றார்கள், ஊழியத்திற்கு மிக உதவியாக இருப்பாளே! ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்றார்கள். நான் பார்க்கும், பழகும் அத்தனை பேருக்கும் ஜெபிப்பேன் என்றார்கள், அதுதான் 12 ஆண்டுகளுக்குப் பிறகும் அவர் ஞாபகம் வைக்க முடிந்தது. இப்படி பிறருக்காக ஜெபிக்க தவறாத ஒரு மாமனிதரை என்னால் மறக்க முடியவில்லை.

இன்னும் எண்ணற்ற நற்குணங்கள்! அண்ணன் நமக்கு முன்மாதிரி, தரிசன வீரர். அவர்களது நடை, பேச்சு, செய்தி, எழுத்து, பாடல்கள் என அத்தனையிலும் ஒன்றே ஒன்று காணப்பட்டது, அது இந்தியா இயேசுவை அறியவேண்டும் என்பதே! அண்ணனின் அவ்வுயர்ந்த தரிசனத்தைத் தொடர்வோம்! உலகில் மனிதர் பிறந்து, மரித்து மறக்கப்படுகிறார்கள். ஆனால் அண்ணன் மறக்க முடியாத மாமனிதர் வரிசையில் நிற்கிறார்கள், அல்லேலூயா! **- பொன் சுபர்சன்**





# எமில் அண்ணனின்
# சுவிசேஷ சகாப்தம்

வரங்கள், வல்லமை, தாலந்துகள், இயக்கங்களை அடுத்தடுத்து உருவாக்கி இயக்கும் உத்வேகம், ஆழ்ந்த தரிசனம்... சுவிசேஷப் பணியில், தனி மனிதர் ஒருவரை இத்தனை கிருபைகளால் தேவன் முடிசூட்ட முடியுமா என்றால், ''தேவனால் எல்லாம் கூடும்'' என்பதே பதில். எமில் அண்ணன் அந்த ஜீவ வசனத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு.

''என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு'' (பிலிப். 4:13) என்று அன்று ஏமி கார்மிக்கேல் அம்மையார் எமில் அண்ணனுக்குக் கொடுத்த மரப்பலகை வசனம், இதயப் பலகையில் இளமையிலேயே பதிந்துவிட்டது.

மாம்சமும் இரத்தமும் கம்யூனிசத்திற்குள் சுண்டி இழுத்தவேளையில், இரவுதோறும் கட்டில் அருகில் முழங்காலில் கண்ணீர் சிந்திய போதகப் பெற்றோரின் நள்ளிரவு ஜெபங்களே ஜெயித்தது - விசுவாச வீரனின் வரிசையில் நிறுத்தியது. P. சாம் ஐயா, Rev. ஜீவானந்தம் ஆகியோரது அரவணைப்பில் ஆவிக்குரிய பெலன் பெற்றார்கள்; 17 வயது தானே என்று படிப்புடன் கவனத்தை நிறுத்தி விடாமல், "இயேசு இராஜாவை" இதயக் கமலத்தில் சுமந்தார்கள்.

சுறுசுறுப்புள்ள எமில் அண்ணனின் ஊழியத்தினால் ''VBS'' என்ற சிறுவர் பணி தமிழகத்தின் திசையெங்கிலும் பரம்பி, புதிய மைல் கல் கண்டது. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு அடிக்கல் கண்டது; சந்தியாவின் நாயகராய், சிலுவை வீரர் கீதங்களின் உயிரோட்டமாய்த் திகழ்ந்து, தேசத்திற்காய்ப் பெருமூச்சு விடுகிறவர்களைப் பெருகச் செய்தார்கள். விசுவாசிகளை ஒன்று திரட்டுவதிலும், முகாம்களை ஒருங்கிணைப்பதிலும், உழைக்கும் ஊழியர்களின் வேர்வையில் கலந்து விடுவதிலும், வேதம் சுமக்கும் சீஷர்களின் பட்சமாய்ப் பாசம் பொங்க நிற்பதிலும் நிகரற்றவராய்க் காணப்பட்டார்கள். வேளாண்மை கூட்டுக்கழகத்திலிருந்து பணித்தளத்திற்கு நேராய்க் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும் நாளும் வந்தது - ரோமர் 15:21ம் வசனத்தின் அடிப்படையில் வந்தது.

வான் விளக்கு, ஆத்தும அமைதி ஆகிய பத்திரிகைகள் வாயிலாக கிறிஸ்துவின் பால் ஈர்ப்பு கண்ட வீர விசுவாசிகள் கொஞ்சமல்ல!

''குட் சமாரிட்டன்ஸ்'' எனும் துயர் துடைக்கும் அமைப்பின் மூலம் அன்றும் இன்றும் வாழ்வு பெறும் குடும்பங்கள்தான் எத்தனை, எத்தனை!

1977ல் 'இண்டியா மிஷன்ஸ் அசோசியேஷன்' அமைப்பின் உருவாக்கத்திற்கான சிறப்பு கமிட்டி அங்கத்தினராயிருந்து அண்ணன் ஆற்றிய பங்கும் இந்திய சுவிசேஷ சரித்திரத்தின் அழியாச் சுவடுகளில் இடம்பெற்றிருக்கிறது.

TWR வானொலி ஒலிபரப்பு மூலம் இந்தியாவிற்குள் வந்த ஊழிய வாய்ப்பை உயர்ந்தளவில் உபயோகித்தார்கள். 1978ல் ஐந்து மொழிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட விஷ்வவாணி வானொலி ஒலிபரப்பை 2004ம் ஆண்டு மீண்டும் அவர்களுக்கு ஒப்படைக்கும் போது 62 மொழிகளாக்கிக் கொடுத்தது தேவனளித்த சுத்தக் கிருபை!





வானொலிச் செய்தியினால் தொடப்பட்டவர்களுக்கு தொடர் பணிபுரிய 1980ல் விஷ்வவாணி ஊழியத்தைத் துவங்கினார்கள். தூத்துக்குடி - முயல் தீவில் முழங்காலில் துவங்கினார்கள். ''செல்லுவோர் - சுதேச ஊழியர், செலுத்துவோர் - இந்திய விசுவாசிகள்'' என்ற அணுகுமுறையுடன் ஆண்டவரைச் சார்ந்து, மூன்று ஊழியர்களுடன் துவங்கி இயக்கினார்கள். நாளடைவில் பணியின் நிர்வாகம், நடப்பு ஊழியங்களை நிர்வாக இயக்குநர் சகோ. P. செல்வராஜ் அவர்களுடன் பொறுப்பாளர்களுக்கு பகிர்ந்தளித்து, ஊழிய அறிக்கைகளை அனுதினமும் கவனமாய் ஆராய்ந்து, தேக்கமுள்ள இடங்களைக் கண்டறிந்து, கரங்கொடுத்து ஊழியத்தை வளர்த்தார்கள். இன்று இதன் முழுநேர ஊழியர்களின் எண்ணிக்கை 3105.



சேமிப்புப் பெட்டிகளை விசுவாசக் குடும்பங்களுக்கு 1980ம் ஆண்டில் மதுரையில் அறிமுகம் செய்தார்கள். பணியாளர் பிரதிஷ்டைகளை முழங்காலில் நடத்தினார்கள்; ''நம்பிக்கையோடு முன் எட்டிப் பார்க்கிறோம்'' என்ற விஷ்வவாணி - சமர்ப்பண் பத்திரிகையின் முதல் பிரதியை 1988ம் தமிழில் வெளியிட்டார்கள். இன்று 10 மொழிகளில் ஒன்றரை இலட்சம் விசுவாச இல்லங்களை இப்பத்திரிகை எட்டுகிறது.



நெகேமியா முகாம், எஸ்றா முகாம், தெபோராள் முகாம், கிதியோனியர் முகாம் என்று கூட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் வேதப் பாத்திரங்களின் பெயரிடுவார்கள் - வேத வசன மையத்தில் - சுவிசேஷ ஊழியத்தின் பெருக்கத்திற்கேற்ப பிரசங்கிப்பார்கள்! அலைச்சல்களுக்கு அண்ணன் அஞ்சியதே இல்லை. தரிசன விதைகளை விசுவாச உள்ளங்களில் தூவுவதில் ஒரு நாளும் துவண்டதே இல்லை! ''ஜனவரி 26 - மும்பை, ஆகஸ்ட் 15 - சென்னை, அக்டோபர் 2 - ஹைதராபாத் ஆகிய நாட்கள் அவர்களின் கூட்டங்களுக்குப் பிரத்யேக நாட்கள்! 1994 ஜனவரியில் அண்ணன் துவக்கி வைத்த ''தேசீய முகாமை'' தொடர்ந்து இந்திய விசுவாசிகள் ஒன்று திரளுவது மாநிலம் மாநிலமாக பெருகிவிட்டது.



வேத வசனத்திலும், ''சொல்லப்பட்டிராத இடங்கள்'' என்ற தெளிவான தரிசனத்திலும் சுதேச ஊழியர்களை ஊன்றக் கட்டுவதற்கு கோரக்பூர் துவக்கம் பயிற்சி நிலையங்கள் பல உருவாக்கினார்கள்! அந்த வரிசையில் 1994 ஜனவரி 14ம் நாள் ஹைதராபாத்திலுள்ள குஷாய்குடா எனுமிடத்தில் நம் சொந்த பயிற்சி நிலையமும் வந்தது. இன்று வரை விஷ்வவாணி பணி 17 பயிற்சி நிலையங்களை இந்தியா முழுவதும் திறந்துள்ளது, துதிக்கத்தக்கது!





பிரதி மாதமும் தலையங்கம் அமைத்து எழுதும் அண்ணனின் வரிகள் ஒவ்வொன்றும் உயிருள்ளவைகள். ஆதியாகமம் (பாகம் 1, 2), யாத்திராகமம் (பாகம் - 1) எனும் விளக்கவுரைகளுடன், சாது சுந்தர்சிங் வாழ்க்கை

சரித்திரம், இயேசு எனக்காகச் சந்தித்த சம்பவங்கள், இயேசுவின் 40 கேள்விகள் என்ற புத்தகங்களும் அவர்களது படைப்பில் பிரதானமானவைகள். பாடல் மற்றும் வெளியீடுகளை முறைப்படுத்த ''கெய்ரோஸ்'' எனும் தனிப்பெரும் துறையை நிறுவவும் கர்த்தர் கிருபையளித்தார்.



வேத வசனங்களைக் கேட்டு அறிந்துகொள்ள கிராமப்புற ஜனங்களுக்குக் கல்வியறிவு தடையாயிருப்பதைக் கண்ட அண்ணன், அந்தத் தடையை தகர்த்தெறிய தேவ வசனப் பெட்டகமாகிய ''மெகா வாய்ஸ்' எனும் வசனப் பேழையை விநியோகிக்க வகை செய்தார்கள். சூரிய வெளிச்சத்திலேயே இயங்கும் இப்பெட்டி விஷ்வவாணி களங்கள் பெற்ற அருட்பெரும் சுவிசேஷ சாதனம்.



பணித்தளங்கள் என்றால் அத்தனை பிரியம் அண்ணனுக்கு. மாத ஊதியம் முழுநேர ஊழியர்களுக்கு அனுப்புகையில், ''தள ஊழியர்களுக்கு முதலாவது'' என்பதில் உறுதியாய் இருந்தார்கள்.

முப்பதும் அறுபதும் நூறுமாய் களங்கள் கனி கண்ட காலமது! ஆராதனைகளின் பெருக்கங்களுக்கு நடுவில் மேய்ப்பனில்லா ஆடுகள் போன்ற நிலை தள விசுவாசிகள் நடுவில் உருவாகியது - அண்ணனின் உள்ளத்தை உடைத்தது, உருக்கியது. எரேமியா 23:1-5ம் வசனத்தின் அடிப்படையில் ஆவியானவரின் ஏவுதலினால் 28.11.1992 அன்று விஷ்வவாணியின் சபை பிரிவு பிறந்தது. போதகர் பயிற்சி - அபிஷேக ஆராதனைகள் தொடர, திருமுழுக்குகளின் எண்ணிக்கையும் தளங்களில் பெருக, திருச்சபைகளின் உருவாக்கம் புதிய உயரம் கண்டது. இன்று விஷ்வவாணியின் தளத் திருச்சபைகளின் எண்ணிக்கை 1888.





பணியின் வளர்ச்சி பரிசுத்தாவியானவரின் செயல் என்பதை இந்தியாவின் அப்புறமான இடங்களில் இனம், இனமாகக் கண்டார்கள். விசுவாசிகளின் கண்ணீரினாலும் காணிக்கையினாலும் கிராமங்களைக் கர்த்தருக்கென்று சுதந்தரித்துவிட இனி காலம் அதிகம் இல்லை என்ற உள்ளார்ந்த வாஞ்சை அண்ணனின் நெஞ்சை வெகுவாய்ப் பிழிந்தது. விசுவாசிகளை ஒன்றுகூட்டி, மூன்று நாட்கள் தங்கவைத்து, தரிசனக் கூட்டங்கள், சந்தியா வேளைகள், செயல்படும் நேரங்களை அர்த்தமுள்ளதாய், ஆசீர்வாதமுள்ளதாய் நடத்தும் கிருபையைத் தேவனால் பெற்றிருந்தார்கள்.



கடற்கரையென்பது எமில் அண்ணனுக்கு மிகவும் பிடித்தமானதோர் இடமாகக் காரணம், இரட்சிக்கப் பட்ட இளம் நாட்களில் அதிகாலை 5 மணிக்கு தனியாக இயேசுவுடன் உறவாடும் இடமாய் இருந்தது தான். இப்பழக்கத்தைத் தூத்துக்குடியில் அண்ணனுக்கு ஏற்படுத்திக் கொடுத்தவர்கள் P. சாம் ஐயா அவர்கள். ''அலையலையாய் ஊழியர்கள்'', ''ஆழக்கடலினில் படகைச் செலுத்திட'', ''கடல் குமுறும், கரை







உடையும்'', ''வலை வீசுவோம்'' என்று அநேக வரிகள் அவர்களது கீதங்களில் இடம்பெறுவதும் கடற்கரை ஜெப அனுபவத்தால் தான். அந்த தனி ஜெப நேரங்களே கனி நிறைந்த ஊழியத்தின் இரகசியம் என்பதை இந்திய விசுவாசிகளுக்குக் கற்றுக்கொடுப்பதற்கு ஏற்றதோர் இடம் கடற்கரையாகத் தான் இருக்கவேண்டுமென்று பரமன்கேணியில் தியான நிலையம் ஒன்றைக் கட்டினார்கள். இந்திய வரலாற்றில் இதுவரை இத்தகைய கடற்கரை கட்டிடம் விசுவாசிகளுக்கென்று எழும்பியதில்லை. 2001 ஜனவரி 13-16 வரை இடம்பெற்ற தியான நிலையத்தின் முதற்கூடுகைக்காக அண்ணன் சிந்திய வேர்வையும் கண்ணீரும் கணக்கற்றவை. அந்நாட்களிலேயே 25 மாநிலங்களைச் சார்ந்த 46க்கும் அதிகமான மொழி / இனங்களைச் சார்ந்த 1500 பேரை ஒன்றுதிரட்டினார்கள். இன்றும் அண்ணனின் பெரும் முயற்சியினால் ஹைதராபாத்தில் மற்றுமொரு தியான நிலையம் எழும்புவதும் துதிக்கத் தக்கது.

இயற்கை, செயற்கை சீற்றங்கள் இந்தியாவின் எப்பகுதியில் நிகழ்ந்தாலும் எமில் அண்ணனின் நெஞ்சம் துடிதுடிக்கும். மத்தியப்பிரதேசம் - போபால் விஷ வாயுக் கசிவு; லாத்தூர் (மகாராஷ்டிரா), புஜ் (குஜராத்) - பூமியதிர்வு; சுனாமியின் சீற்றம்; குஜராத் மற்றும் கந்தமால் கலவரம் என்று மரண ஓலங்கள் எங்கெல்லாம் கேட்டதோ அங்கெல்லாம் உடனுக்குடன் அண்ணனின் பாதங்கள் விரைந்தது.



பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணங்கள், நிரந்தர இல்லங்கள் என்று அடுக்கடுக்கான உதவிகளை ஆரவாரமின்றி வெளியில் தெரியாதபடி செய்துமுடித்தார்கள். இதுவரை கந்தமால் மாவட்டத்தின் 37 கிராமங்களில் 531 இல்லங்களைக் கட்டிக்கொடுத்தது அண்ணனுக்கு கர்த்தர் பாராட்டிய தயவு.

விஷ்வவாணியின் தளங்கள் சபைகளைப் பிறப்பித்த பின், சமுதாயத்தில் இன்னும் மேலோங்கிவிட வேண்டும்; மருத்துவம், கல்வி, சுய வேலை வாய்ப்பு, பஞ்சாயத்துத் தலைவர் பயிற்சி என்று அனைத்திலும் முழு உருமாற்றம் காணவேண்டும் என்பதற்காக துவங்கப்பட்டதுதான் விஷ்வவாணியின் சமுதாய மேம்பாட்டுத் துறை - ''விஷ்வாசி சங்கதி''. கிராமப் புறங்களில் இன்று இச்சேவையினால் இலட்சோப இலட்ச ஜனங்களின் வாழ்வு துளிர்விடக் காரணம் 1990களில் எமில் அண்ணன் கண்ட தூர தரிசனமே!




திருமண வீடுகளில் கலந்துகொள்வதைக் காட்டிலும் மரண வீடுகளில் துயர சாகரத்திலிருப்போரின் கண்ணீரில் கலந்துகொள்வதையே தெரிந்துகொண்டார்கள். வேதாகமத்தை நெஞ்சோரத்தில் வைத்துக்கொள்ளும் பழக்கம் அவர்களுடையது. வேதப் புத்தகத்தின் மீது வேறெந்த பொருளையும் வைப்பதைச் சகிக்கமாட்டார்கள். செல்போன் என்பதை கூட்டங்கள் நடத்துமிடங்களுக்குக்



கொண்டுவருவதைக் கூடியமட்டும் நிராகரித்தார்கள்.

தூர தேசத்திலிருந்து வந்த கப்பல் ஒன்றின் கன்டெய்னர் நிரம்ப



ஆயிரக்கரணக்கான ஆவிக்குரிய நூல்கள், வேதப்புத்தகங்கள், விளக்கவுரைகள்! இந்தியக் கரை சேரும் முன் அவைகளை ஏலமெடுத்து, வெடிமருந்து சுற்றுவதற்குப் பயன்படுத்தப் பலர் போட்டியிட்ட நேரமது! எமில் அண்ணனின் செவிக்கு வந்தது இத்துயரச் செய்தி! விலைக்கிரயம் பற்றி சற்றும் அஞ்சாமல், துணிந்து அத்தனை புத்தகங்களையும் மீட்டார்கள். இந்திய விசுவாசிகளின் கரங்களில் கிடைக்கச் செய்தார்கள்! பரிசுத்த வேதாகமத்தை உயிருக்குயிராய் நேசித்ததுடன், முழங்காலிலேயே பல முறை திரும்பத் திரும்ப வாசித்து, பல வர்ணங்களில் அடிக்கோடிட்டு படிப்பதை பழக்கத்தில் கொண்டிருந்தார்கள்.

அண்ணன் நடத்தும் முகாம் ஒவ்வொன்றிற்கும் சுவிசேஷப் பணி சார்ந்த கருப்பொருள் கொடுப்பதிலும், கருப்பாடல் கட்டி, கற்றுக்கொடுப்பதிலும், பாட வைப்பதிலும் அகம் மகிழ்வார்கள்.

முன் நாட்களின் இந்திய ஜனாதிபதி, அமெரிக்க அதிபர், தெரசா அம்மையார் மற்றும் 144 முக்கிய நாடுகளின் தலைவர்களுடன் கூடுகைகளில் பங்கேற்றிருந்தாலும் அண்ணனின் மனம் அதை ஒருபோதும் பெரிதுபடுத்தியதில்லை. பிரதிநிதிகள், விசுவாசிகள், இளைஞர்கள் -



சுவிசேஷத்திற்காய் சிறு கூட்டம் சிந்தும் கண்ணீருடன் கலந்திருப்பதில் தான் தன் ஜீவியத்தின் பெரும் பகுதியைச் செலவிட்டார்கள். ‘‘ஒரு லட்சம் கிராமங்கள்’’ எனும் தரிசனத்தை நெஞ்சத்தில் ஏற்ற நாள் துவக்கம், தேசத்தின் பல முனைகளுக்கும் பயணித்துக் கொண்டேயிருந்தார்கள்! அப்புறமான இடங்களில் அவர்கள் ஏற்றி வைத்திருக்கும் சுவிசேஷ தீபம் ஒரு லட்சம் இந்திய கிராமங்களைக் கிறிஸ்துவின் பிரகாசத்திற்குள் வழிநடத்தும் வரை அந்த அணையா தீபங்கள் மங்குவதேயில்லை!

ஐந்து நிறங்கள்... விஷ்வவாணி தளப் போதகர் அணியும் அங்கிகளின் கையோரங்களில் - கூட்டங்களின் நாற்காலிகள் வரிசையில் - பந்தல் கால்களில் - மேடை பூக்களின் வர்ணங்களில் - முகாம் வளாகத்தை மறைக்கும் தகரங்களில் கூட அந்த ஐந்து நிறங்கள் முறைப்படி இடம்பெறும். விஷ்வவாணி திருச்சபைகளின் கொடியும் இந்நிறங்களைத் தான் தாங்கி நிற்கின்றது. கீழிருக்கும் கருப்பு நிறம் பாவத்தையும், அதனைத் தொடும் சிவப்பு நிறம் இயேசுவின் இரத்தத்தையும், அதையடுத்த வெண்மை நிறம், இயேசுவின் இரத்தத்தால் மனித இதயத்தில் உண்டாகும் பரிசுத்தத்தையும், தொடரும் பச்சை நிறம் பரிசுத்தத்தில் வளரவேண்டுமென்ற உணர்வையும், பொன் நிறம் மேலோகத்தின் மேன்மையையும் குறிக்கும் வண்ணம் வர்ணங்களை வரிசைப்படுத்தி, எவரும் எளிதில் சுவிசேஷம் அறிய வகை செய்து கொடுத்தார்கள். இன்று அண்ணனின் சரீரம் விதைக்கப்பட்டிருக்கும் இடமும் இந்த ஐந்து நிறங்களைத் தான் தாங்கி நிற்கின்றது.




இந்தியாவின் வரைபடத்தை முன்வைத்து, மாநிலம் மாநிலமாய்

விரல்வைத்து கண்ணீர் சிந்தி ஜெபித்ததன் பலனை கனிகளால் கண்டார்கள். ஊழியர் கூடுகையானாலும், ஆட்சிக்குழு மன்றங்களானாலும் அவர்களது சொற்களும் சம்பாஷனைகளும், ஆலோசனைகளும் முடிவான தீர்மானங்களும் இந்தியாவிற்குச் சுவிசேஷம் என்பதைச் சுற்றியே இருந்தது.




சுவிசேஷ ஊழியத்தைப் பிரதானமாக்கி இந்தியாவின் பலமுனைகளிலும் தனித்து இயங்கிவந்த இயக்கங்களை தெரிந்தெடுத்து, ஒன்றுகூட்டி, தரிசனமூட்டி, 2020க்குள் இந்தியாவில் 20 சதவீத விசுவாசிகளைக் காணும் வாய்ப்புகளையும் சாத்தியக்கூறுகளையும் முன்வைத்து, BLESS India / Vision 2020 எனும் ஒருங்கிணைக்கும் ஊழியத்தை பரிசுத்தாவியானவரால் பெற்று, 12.01.2005ல் டெல்லியில் அதனை துவக்கிவைத்தார்கள். துரிதப் பின்தொடர் மையங்களாய் ஏழு இடங்களை மையப்படுத்தி, பிரத்யேகப் போதகர், ஊழியப்பயிற்சியினை நாடெங்கிலும் முடுக்கிவிட்டார்கள். இரட்சகரின் வருகை தாமதிக்குமானால் இந்த இருபது சதவீதத்தை விட மேலானவைகளை நமது கண்கள் கண்டே தீரும்.



பெலவீனப் படுக்கையிலும் அண்ணனின் வாயிலிருந்து உரத்த சத்தமாய் உதிர்ந்த வார்த்தைகள்: “வேகவேகமாய் மிஷனெரிகள் தளங்களுக்குள் போய்க் கொண்டே இருக்கிறார்கள்; அவர்களை ஆதரிக்கவேண்டும்; எல்லா வகையிலும் உதவவேண்டும்; விடாமல் தாங்கவேண்டும்” என்பதே.

பரிசுத்தாகமத்தின் பக்கங்களை கண்ணீர்த் துளிகளால் நனைத்த பரிசுத்தவான், இரத்தம் சிந்தி இரட்சித்த இயேசு கிறிஸ்துவை இன்னல்களின் நடுவிலும் இன்முகம் மாறாமல் நேசித்த மா மகான், தேவன் தந்த பொறுப்புகளை உண்மையும் உத்தமமுமாய் நிறைவேற்றிமுடித்த சிலுவைவீரர், 19.12.2013 வியாழனன்று தன் பிதாவின் நித்திய அழைப்புக்கு இணங்கிவிட்டார். இனி இந்த உலகில் அந்த அற்புத அண்ணனின் அனல்பொங்கும் தரிசனச் செய்திகளையோ, அர்த்தம் நிறைந்த அணுகுமுறைகள் ஆலோசனைகளையோ, கண்ணீருள்ள ஜெபங்களையோ கேட்கமுடியாது என சிந்திக்கும்பொழுது நெஞ்சம் சிதிலமடைகின்றது. அண்ணனின் சுவிசேஷ சகாப்தம் சமாப்தியாகவில்லை; தொடர்கிறது. வாசமலர் உதிர்ந்தது; வாசமோ விலகவில்லை. இந்திய தேசத்தின் ஒரு லட்சம் கிராமங்களை இயேசுவின் சுவிசேஷ வாசம் எட்டும்வரை இந்த விசுவாச வீர மலரின் வாசம் வீசிக்கொண்டேயிருக்கும்.

அன்பு அக்கா டாக்டர் ஆனந்தி ஜெபசிங், பிள்ளைகள் டாக்டர் டென்னிசா டேவிட்சன், திருமதி சாலினி பத்ராஸ், சகோ. ஆண்ட்ரூ ஆகியோரின் குடும்பங்களைக் கர்த்தர் தேற்றுவாராக. எமில் அண்ணனால் நிறுவப்பட்ட மற்றும் நிர்வகிக்கப்பட்ட ஒன்பது இயக்கங்களின் ஊழியர் குடும்பங்களுக்கும், கதறும் விசுவாச நெஞ்சங்களுக்கும் தேவ ஆறுதல் உண்டாகட்டும். ■



## மறப்பதில்லை

"ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (மத். 16:24) என்ற வசனத்தைவிட்டு சற்றும் விலகாமல் வாழ்ந்தவர்கள் எமில் அண்ணன்.

இதயம் திறந்த மனிதர்; தனக்கென்று எதையும் சேர்த்து வைக்காதவர்; அவர்களுடன் 15 ஆண்டுகள் இணைந்து வேலை செய்தது ஆசீர்வாதமாயிருந்தது. கடந்த ஆண்டில் 85 ஆயிரம் சிறுவர்களை வசனத்தால் சந்திக்கும் கிருபையைப் பெற்றேன். அதற்கு அடித்தளமாயிருந்தது அண்ணனிடமிருந்து கற்றுக் கொண்ட கனிவு, இரக்கம், தாழ்மையின் ஊழியமே. அண்ணனை நாங்கள் மறப்பதில்லை. – சாமுவேல், நிதிக்காவலர், டிரான்ஸ் வேர்ல்டு ரேடியோ.

## இந்தியாவின் பவுல்

1969ல் சென்னை – சீயோன் ஆலயத்தில் அண்ணனின் செய்தியினால் தொடப்பட்டு, அன்றைய நிலையிலும் ஓர் மிஷனெரியைத் தாங்க அர்ப்பணித்தேன். 1970ல் 11 மாநிலம் – 220 ஜில்லா – 440 ஊழியர்கள் என திட்டம் வரைந்ததுடன் நில்லாமல், தனி மனிதராய் 11 மாநிலங்களிலும் தள ஆய்வு செய்து, ஊழியர்களைப் பணியமர்த்தினார்கள். அதிகாலையில் இந்தியாவிற்காய் மாநிலம் மாநிலமாய் ஜெபிக்கும் பழக்கம் எனக்குள் வந்ததும் அண்ணன் மூலமாகத்தான். ஆம், 'இந்தியாவின் பவுல்' எனும் பெயர் எமில் அண்ணனுக்குச் சரியாய்ப் பொருந்தும்.

– P.D. பாண்டியன், சென்னை.

விஷ்வவாணி தமிழ் வானொலி மூலம் அதிகாலையில் அனைத்து தரப்பு மக்களுக்காகவும் அன்பு ததும்ப, உணர்ச்சி பொங்க எமில் அண்ணன் ஏறெடுக்கும் ஜெபத்தைக் கேட்டிருக்கிறேன். அதில் அத்தனை மன உருக்கம் இருக்கும்! தமிழ் விசுவாசிகளை அன்பினால் கட்டிப்போட்ட ஜெபம் அது!

- பிரசங்க பீடத்தில் கண்டிப்பும் உருக்கமும் கலந்த அவரது எளிமையான கெம்பீர வேத முழக்கங்கள்...
- தேவ நாட்டத்தையும் ஆத்தும வாஞ்சையையும் கிளர்ந்தெழுப்பண்ணும் அவரது இலட்சியப் பாடல்கள்...
- தன் உடன் ஊழியர்களது தகுதிக்கு மிஞ்சி அவர்களை நம்பித் தந்த பொறுப்புகள், சன்மானங்கள்...
- இந்தியா நற்செய்திமயமாக அவர் கண்ட அகன்ற பாரதக் கனவு திட்டங்கள்...
- எதைச் செய்தாலும் அதை நேர்த்தியாய் செய்து முடிக்கவேண்டும் என்ற அவரது தணியாத ஆசை விருப்பங்கள்...
- TWR மற்றும் விஷ்வவாணி எனும் இரு பெரும் ஊழியங்களைத் தன் காலத்தில் கட்டியெழுப்பி அவற்றின் மூலம் சுவிசேஷம் உலகை ஊடுருவ அவர் மேற்கொண்ட பிரயாசங்கள்...

என இவை அனைத்தும் எவராலும் மறக்க முடியாத அவரது வீர சாதனைகள்! தேவனுக்கு அவர் சமர்ப்பித்த பாத காணிக்கைகள்!

அவரது நித்திய பிரவேசத்தால் ஏற்பட்டிருக்கும் இப்பேரிழப்பை விஷ்வவாணி ஊழியர்கள் ஞானமாய் கையாளவும், பரிசுத்த பயத்தோடும் பூரண அர்ப்பணத்தோடும் மனமொத்த ஒற்றுமை சிநேகத்தோடும் தேர்ந்த தலைமைத்துவத்தோடும் உத்தம உக்கிராணத்துவத்துடனும் வெகுஜன விமர்சனங்களுக்கு இடமின்றி விஷ்வவாணி ஊழியங்களை அடுத்த தலைமுறைக்கு (புதியதொரு எல்லைக்கும் பரிமாணத்துக்கும்) எடுத்துச் செல்ல உங்கள் அனைவருக்கும் தேவன் அருள்பாலிப்பாராக, என்று அண்ணனின் நீண்ட கால பிரிய சகோதரனாகக் கேட்டுக்கொள்கிறேன்.

– D. கிங்ஸ்லி அருணோதயக்குமார், இந்திய சேவைப்பணி.



# பணித்தளச் செய்திகள்

**அதிசயங்களைச் செய்கிற தேவன் நீரே.** சங்கீதம் 77:14



**1 ஜம்மு காஷ்மீர், தளம்: கிஞ்வானி ஊழியர் மஞ்சீத் சிங்**

பாவ அறிக்கை செய்த 8 பேர் விசுவாசிகள் ஐக்கியத்தில் இணைந்தனர். மம்தாவின் இல்லம் தேவ ஊழியத்திற்கென திறக்கப்பட்டது. சம்பாவின் 5 மாத வியாதிப்படுக்கை இயேசுவின் நாமத்தில் மாறியது.

ரபீர் கிராமத்தில் இன்னும் 67 குடும்பங்கள் இரட்சிக்கப்படவேண்டும். காஞ்சன் குமாரியின் சாட்சி மூலம் அநேக இதயங்கள் இயேசுவண்டை திரும்ப... சம்பா தாலுகாவின் டோக்ரி ஜனங்களுக்கு ஊழியர்கள் இன்னும் தேவை...

**2 தளம்: விஜய்பூர் ஊழியர்: ராஜ்குமார்**

3 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கை செய்தனர். விசுவாசி அர்ஜுன் சுவிசேஷம் அறிவிப்பதில் தீவிரங்கொண்டுள்ளார். பிசாசின் பிடியிலிருந்த ரேகாவை இயேசு விடுவித்தார்.

துனாசாக் பகுதியில் தொடரும் இளைஞர் கூடுகைகளுக்காக... கர்ப்பத்தின் கனிக்காக ஜெபிக்கும் மாகல் குடும்பத்திற்காக... விஜய்பூரில் வேதபாட வகுப்பு துவங்கப்பட...

**3 பஞ்சாப், தளம்: ஹோசியார்பூர் ஊழியர்: ஜான் மசீ**

21 பேர் சுவிசேஷத்தினால் புதுமனம் பெற்றனர். பிப்லன்வாலாவில் கர்த்தருடைய சபை 68 அங்கத்தினர்களாய் வளர்ந்துள்ளது. கமல் ஜீத்தை அலைக்கழித்த அசுத்த ஆவி இயேசுவின் நாமத்தில் துரத்தப்பட்டது.

விசுவாசியானதால் இன்னல்களைச் சந்திக்கும் மந்தீபுக்காக... ராமஸ்ராவின் வீட்டில் கூடும் சபை கிறிஸ்துவின் வசனத்தில் பெலப்பட... சபை மூப்பர்களுக்கான முகாம் ஹோசியார்பூரில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

**4 பஞ்சாப், தளம்: போக்பூர் ஊழியர்: ராகேஷ் குமார்**

பச்ரங்காவில் 55 பேர் சுவிசேஷத்திற்குச் செவிசாய்த்தனர். மஞ்சூர் மசீயின் இல்லம் வேதபாட நிலையமானது. போக்பூரில் 3 பேர் தங்கள் புதிய விசுவாசத்தை அறிக்கையிட்டனர்.

விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாகும் 14 பேருக்காக... தண்டியில் சமுதாய நலப்பணிகள் துவங்கப்பட... தளம் சார்ந்த 6 ஆராதனைக் குழுக்களுக்கு இசைக்கருவிகள் அவசியம்.

**5 இமாச்சலப் பிரதேசம், தளம்: அம்புவா தளம்: சன்னி குமார்**

பயோன்டா சாகிப் தாலுகாவில் இத்தளம் புதிதாய்த் திறக்கப்பட்டுள்ளது. பக்கார் கிராமத்தில் 7 குடும்பங்கள் சுவிசேஷத்திற்கு செவிசாய்த்தன. நகடாவில் வசனம் செல்லும்படியான வாசல் திறவுண்டது. தன்டா கிராமத்தார் நற்செய்தியில் மனம் பதிக்க... புதிய விசுவாசி யான அம்கல் மூலம் முழு குடும்பமும் இரட்சிக்கப்பட... அம்பவா பிராந்தியத்தில் காணப்படும் அந்தகாரக் கிரியைகளைக் கர்த்தர் அதமாக்கிப்போட...



**6 உத்தராகாண்ட், தளம்: பர்தாப்பூர் ஊழியர்: நாராயன் சிங் ரானா**

தாரு ஜனங்கள் நடுவிலிருந்து 5 பேர் புதிதாக விசுவாசிகள் ஐக்கியத்தில்

இணைந்தனர். சுவிசேஷப் பணியில் பிரேம்சிங் வீட்டாரும் பங்கெடுக்கின்றனர். சந்தன் சிங், கோமதி தேவியின் வியாதிகளை இயேசு நீக்கினார்.

போதைப் பழக்கத்தின் அடிமைத்தனத்தினின்று வீரேந்திர சிங் விடுபட... தாகி சிங் வீட்டில் தொடரும் தேடுவோர் கூட்டங்கள் பலன் தர... 51விசுவாசிகள் கூடும் ஜடான்பூர் ஆராதனைக் குழுவுக்கு ஆலய நிலம் வாங்கப்பட...

**7 உத்தராகாண்ட், தளம்: சாருபேட்டா ஊழியர்: பிரகாஷ் சிங். ஆர்.**

மனநோயிலிருந்த காயத்ரியைக் கர்த்தர் குணமாக்கினார். ஜெய்ராம், லகான் ஆகியோரின் இல்லங்கள் சுவிசேஷ வேலைக்கெனத் திறக்கப்பட்டுள்ளது. சன்டா, பாரி கிராமங்களில் வசனம் செல்லும் வாசல்கள் திறவுண்டன.

விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாகும் 10 பேருக்காக... நாக்மா கிராமத்தில் காணப்படும் தடைகளைத் தேவன் நீக்கும்படி... மனந்திரும்பிய ராம்கலி மூலம் குடும்பம் கர்த்தரைக் கண்டுகொள்ள...

**8 ஹரியானா, தளம்: பாம்னிகேடா ஊழியர்: குருதேவ்**

தரம்சிங் குடும்பத்தினரைச் சமாதானப்பாத்திரமாய்க் கர்த்தர் தந்துள்ளார். ஔரங்காபாத்தில் 5 குடும்பங்கள் சுவிசேஷத்திற்குச் செவிசாய்த்தன. ரேகா வீட்டாரைக் கர்ப்பத்தின் கனியினால் கர்த்தர் ஆசீர்வதித்தார்.

சந்தன் என்பாரின் மந்தமான செவிகளைத் தேவன் திறந்தருள... ஆரம்ப சுகாதார மையம் தீகோட் கிராமத்திற்கு அவசியமாகிறது... மித்ரோல், புல்வாடி கிராமங்களில் வேதபாட வகுப்பு துவங்கும் பிரயாசங்களுக்காக...

**9 டெல்லி, தளம்: மதன்பூர் காதர் ஊழியர்: ஜான் சௌகான்**

9 பேர் தங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்பினர். மீதாபூர் பகுதி ஊழியங்களில் ராகுல், சூரஜ்பால் ஆகியோர் முன் நிற்கின்றனர். “இனி மது அருந்துவதில்லை” என மகேந்தர் தீர்மானித்துள்ளார்.

துக்ளகாபாத் தாலுகாவிலிருந்து முழுநேர ஊழியர்களைத் தேவன் எழுப்பித்தர... ஜெயித்பூரில் சந்திக்கப்பட்ட 21 குடும்பங்களும் விசுவாசத்தில் வளர... தாஜ்பூரில் கூடிவரும் 28 சிறுவர்கள் மூலம் குடும்பங்களைக் கர்த்தர் சந்திக்க...


**10 இராஜஸ்தான், தளம்: பாகிதோரா ஊழியர்: சுரேஷ் கரேஸியா**

சுவிசேஷப் பிரபல்யத்திற்கென்று மகான் தன் இல்லத்தை தந்துள்ளார். ‘ருதி’யை அலைக்கழித்த அசுத்த ஆவி இயேசுவின் நாமத்தில் துரத்தப்பட்டது. கிறிஸ்மஸ் நாளில் மிகுந்த குளிர் நடுவிலும் விசுவாசிகள் வாஞ்சையுடன் வந்து ஆராதித்தனர்.

பணிக்கெதிராய் வருவோரின் இதயங்களில் கர்த்தர் கிரியைசெய்ய... சுவிசேஷப் பணியில் வாஞ்சைகொண்டுள்ள தல்ஜி மூலம் அநேகர் இயேசுவை அறிய... ‘ஜமுரி’யில் தொடரும் தேடுவோர் கூட்டங்கள் புதிய ஆத்துமாக்களைத் தர...

## மீண்டும் பார்ப்பேன்

**இந்த நூற்றாண்டில் ஆசியாவிலேயே மிகச்சிறந்த உயர்ந்த தரிசனம் கொண்டவராய் – ஊழியத் தலைவராய்த் திகழ்ந்த** Dr. N. **எமில் ஜெபசிங் அவர்கள் எண்ணத்திலும், செயலிலும் தெளிவான தூர தரிசனம் கொண்டவர்கள்; தடுமாறாத, திட சிந்தனையாளர்; அச்சமின்றி அனைத்தையும் எதிர்கொண்டு, சுவிசேஷத்திற்காய்த் திரளான ஜனங்களைத் தயார்படுத்தினார்கள். ஆவிக்குரிய வாழ்வில் உயர்ந்ததோர் ஒழுக்கத்தைக் கடைபிடித்து, அன்றாட வாழ்வில் அநேக முன்னுதாரணங்களை வைத்துப் போன அன்பு சகோதரனை நான் மீண்டும் பார்ப்பேன். –** Dr. K. இராஜேந்திரன் (WEA-MC)



**11 இராஜஸ்தான், தளம்: குஷல்காட் ஊழியர்: கிம்ஜி வட்கியா**

'சாபல்பூரா'வில் தொடரும் முழு இரவு ஜெபக்கூடுகை மூலம் தேவ அற்புதங்களும் தொடருகிறது. வீர்சிங் வீட்டாரை மோர்ஜாரி கிராமத்தின் சமாதானப் பாத்திரமாய்த் தேவன் தந்தார். முகேஷின் இல்லம் சுவிசேஷ வேலைக்கென திறக்கப்பட்டதற்காய்த் துதியுங்கள்.

கட்லி கிராமத்தில் கர்த்தருடைய ஆலயம் கட்டப்பட... சந்தலி பகுதியில் இன்னும் 184 குடும்பங்கள் கிறிஸ்துவை அறியவேண்டும்... சுனில் கனவா வீட்டில் கூடும் ஜனங்கள் வசனத்தில் ஸ்திரப்பட...

**12 உத்திரப் பிரதேசம், தளம்: ஜான்சா ஊழியர்: ராம் குமார்**

போஜ்புரி மொழியினரில் 5 பேர் விசுவாசிகள் ஐக்கியத்தில் புதிதாய் இணைந்துள்ளனர். ஜலால்பூரில் தேவனைத் தொழுதுகொள்வோர் எண்ணிக்கை மேலும் உயர்ந்துள்ளது. சஞ்சனாவின் மந்தமான செவிகள் ஜெபத்தினால் திறவுண்டது.

'ஹத்தி' திறந்தவெளிக் கூடுகையில் பங்கேற்ற 20 பேரும் புதுவாழ்வுக்குள் வர... தளச் சிறுவர்களுக்குக் கல்வி வசதி கிடைக்க... தொடரும் உபவாசக் கூட்டங்களில் அற்புத, அடையாளங்கள் நிகழ...

**13 பீஹார், தளம்: அரா ஊழியர்; விஜய் மசீ**

பூனம் தேவியை மனநோயினின்று கர்த்தர் சுகமாக்கினார். 19 பேர் தங்கள் வாழ்வை கிறிஸ்துவுக்கு ஒப்புவித்துள்ளனர். அசுத்த ஆவியின் அலைக்கழிப்பினின்று அஜீத் ராம் விடுதலையானார்.

மில்கி கிராமத்தில் இன்னும் 165 குடும்பங்கள் சந்திக்கப்பட... ராமயன்ராம் வீட்டில் கூடும் சபை கிறிஸ்துவில் மேலும் பெலப்பட... தேவாரியாவில் தொடரும் இரவுக்கூட்டங்கள் ஆத்துமாக்களைத் தர...

**14 பீஹார், தளம்: அசனி ஊழியர்: ராஜ்குமார்.**

வினோத் ராமின் இல்லம் ஆராதனைக் கூடமானது. ஜெயித்பூர் தேடுவோர் கூட்டம் 30 பேர் நற்செய்தி அறிய ஏதுவானது. வசனங்கேட்ட அகிலேஷ் ராம் குடிப்பழக்கத்தை நிறுத்திவிட்டார்.

எசாதீயில் கர்த்தருடைய சபை உருவாக... புதிய விசுவாசி காசிநாத்தின் ஊழியத்திற்காக... சோன்பூராவில் வசிக்கும் போஜ்புரி ஜனம் நடுவில் ஊழியங்கள் வளர...

**15 சிக்கிம், தளம்: சாம்தங் ஊழியர்: பெனடிக்ட் சுபா**

"இனி இயேசுவுக்காக வாழ்வோம்" என 6 பேர் பிரதிக்னை எடுத்தனர். அனுராய் வீட்டார் கர்த்தரையே சேவிக்க முன்வந்துள்ளனர். ராலே எனுமிடத்தில் புதிதாக 12 குடும்பங்கள் சுவிசேஷத்திற்குச் செவிசாய்த்தன.

## பொறுப்பை நிறைவேற்றினார்கள்...

"கோடிக்கணக்கான ஆத்துமாக்களுக்குச் சுவிசேஷத்தைக் கொடுப்பதற்கு சகோ. எமில் ஜெபசிங் அவர்களைக் கர்த்தர் பயன்படுத்தினார். செய்துமுடித்த ஊழியங்கள் மிகவும் ஆச்சரியமானவைகள்! வெளியே தெரியாதபடி அவர்கள் செய்த மகிமையான ஊழியங்களும் உண்டு. வட இந்தியாவிலேயே பாதிக்கப்பட்ட, யாரும் கண்டுகொள்ளாத எளிமையான ஊழியர்களை



அழைத்து, ஊழியத்திலே உற்சாகப்படுத்தி, அவர்களுக்குள்ளே தரிசனத்தை உண்டாக்கி, பெலப்படுத்தின தேவ மனிதர். சகோதரர் எமில் அவர்களை நம்பி, தேவன் தந்த பொறுப்பை நிறைவேற்றி முடித்துவிட்டார்கள்." – சகோ. மோகன் சி. லாசரஸ், இயேசு விடுவிக்கிறார்.

யான் கிராமத்துச் சிறுவர் நடுவில் தொடரும் ஊழியங்கள் கனி தர... சாம்தங் சபைக்குக் கல்லறை தோட்டத்திற்கான நிலம் தேவையாகுகிறது... தள கிராமங்களில் மருத்துவ முகாம்கள் நடத்த ஆயத்தமாகிறோம், ஜெபியுங்கள்.

**16 சிக்கிம், தளம்: அப்பர் துமின் ஊழியர்: சைமன் லெப்சா**

டி.பி. வியாதியிலிருந்த லாதன் லெப்சா இயேசுவின் தொடுதலைப் பெற்றார். மின்குமார் டோர்ஜி மூலம் சுவிசேஷம் அண்டை இல்லங்களிலும் பரம்பி பலன் தருகின்றது. தடைகள் நடுவிலும் புஜல், ராகேஷ் ஆகியோர் விசுவாசத்தில் பெலப்பட்டுள்ளனர்.

தளத்தில் இன்னும் 143 குடும்பங்கள் கிறிஸ்துவை அறியவேண்டும்... துமின் தாலுகாவின் பூட்டியா ஜனங்களுக்குச் சுவிசேஷகர்கள் இன்னும் தேவை... தன்பாரியில் கர்த்தருடைய சபை உதயமாக ஜெபியுங்கள்.

**17 மணிப்பூர், தளம்: லேதாங்பாண்ட் ஊழியர்: சாமுவேல் கோம்**

வேதபாட வகுப்பு, ஆராதனை குழுக்களில் இளைஞர்களின் பங்கேற்பு அதிகரித்துள்ளது. விசுவாச அறிக்கைக்கான ஆயத்த வகுப்புகளில் 28 பேர் பங்கேற்கின்றனர். ‘சிங்கடா’வில் சிறுவர் ஊழியர் ஆரம்பிக்கப்பட்டது.

கிராமத் தலைவர்களின் இதயங்களில் பரிசுத்தாவியானவர் கிரியைசெய்ய... பின்வாங்கிப் போன திலிப் குமாருக்காக... கதங்பாண்ட் கிராமத்தில் வசனங்கேட்ட 27 குடும்பங்களும் விசுவாசத்தில் நிலைக்க...

**18 மணிப்பூர், தளம்: அவாங் குனாவ் ஊழியர்: சுர்ஜித் சிங்**

5 தேடுவோர் கூட்டங்கள் நடத்தப்பட்டன. 26 பேர் முதன்முறையாய்ச் சுவிசேஷம் அறிந்தனர். வேதபாட வகுப்பு நடத்துவதற்கு பிரன் இடமளித்துள்ளார்; 10 பேர் வசனங் கற்கின்றனர். அசான்பெங்கை பகுதியில் அனுகூல வாசலை கர்த்தர் முன்வைத்தார்.

கொண்டோ கிராமத்தார் வசனத்தில் மனம் பதிக்க... லுகாய் வீட்டில் கூடும் சபை ஆவிக்குரிய வளர்ச்சியடைய... மின் வசதிகளுக்குத் தூரமாயிருக்கும் நம் தள கிராமங்கள் மின்வசதி பெற...

**19 அசாம், தளம்: டாங்டோலா ஊழியர்: தரணி ரபா**

தேவ தயவால் 3 வேதபாட வகுப்புகள் தள கிராமங்களில் திறக்கப்பட்டன. 233 பேருக்குச் சுவிசேஷ கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. வலிப்பு வியாதியிலிருந்த தாபல் ரபாவுக்குத் தேவன் சர்வாங்க சுகம் தந்தார்.

காக்ரகான் கிராமத்தில் விதைக்கப்பட்ட வசனங்கள் ஆத்துமாக்களைத் தர... கிராமத் தலைவர்களின் இதயங்களில் சுவிசேஷ வாஞ்சை பிறக்க... கஜல்கான் தாலுகாவின் கிராமங்களுக்கு போடோ, ரஜ்பான்ஸி இன ஊழியர்கள் இன்னும் தேவை.

**20 திரிபுரா, தளம்: தாஸ்கோரியா ஊழியர்: சரோஜ் தெபர்மா**

9 பேர் புதிய விசுவாசத்தில் பெலப்பட்டுள்ளனர். தோபேதார் எனுமிடத்தில் தொடரும் இரவுக் கூட்டங்களில் புதிய தொடர்புகளைப் பெறுகிறோம். பிரிந்து வாழ்ந்த ரத்தன் குடும்பம் நற்செய்தியினால் ஒன்றுசேர்ந்தது.

## மறக்கப்பட்ட மக்கள் இனங்களுக்கு இயேசுவைக் கொடுத்தார்

“கர்த்தருடைய வார்த்தையை சாமானியர்களும் கற்றுக்கொள்ளும் வகையில் பயிற்சிகளையும், பயிற்சி முறைகளையும் உருவாக்கியதில் பாஸ்டர். டிக் உட்வர்ட் அவர்கள் வரிசையில் சகோதரன் எமில் உள்ளார். உலகிற்குத் தெரியாத மறக்கப்பட்ட பல மக்கள் இனங்கள் இயேசுவுக்குச் சொந்தமாகவேண்டும் என சகோதரன் எடுத்த பிரயாசம் ஏராளம்.”

– டாய்ஸ் ரோசர், ஐசிஎம் ஸ்தாபகர்.



பிரேந்திர காமியில் சபை உருவாக... பின்வாங்கிப்போன பிரதீப் மீண்டும் சபை சேர... மதியாகாமி, காகன்சாவ் கிராமங்களில் வசனங் கேட்டோர் உள்ளம் புதிதாக...

**21 திரிபுரா, தளம்: மொய்புவா ஊழியர்: ஜானி ஜமாத்தியா**

தளத்தின் இரவுக் கூட்டங்களில் 19 புதிய நபர்கள் நற்செய்தி அறிந்தனர். சிதஜாய் பகுதியில் வசனம் செல்லும்படியான வாசல் திறவுண்டது. அமித் ரியாங் என்பார் ஒனராய் கிராம ஊழியங்களில் தன்னார்வ உதவிபுரிகிறார்.

பணிக்கெதிராய் வரும் அத்தின் தெபர்மாவை தேவன் சந்திக்க... ஆரம்ப சுகாதார மையம் தள கிராமங்களுக்கு அவசியமாகிறது... 'மொய்புவா'வில் வசனங்கேட்ட 35 குடும்பங்களும் இரட்சிப்பின் அனுபவம்பெற...

**22 மேற்கு வங்காளம், தளம்: பிஜலிமோனி ஊழியர்: சுசில் டெட்டே**

தள விசுவாசிகள் உபவாசித்து ஜெபிக்கத் துவங்கியுள்ளனர். கோதம்லைன் கிராமத்தில் கர்த்தர் புதிய திருச்சபை தந்தார். பிசாசின் பிடியிலிருந்த நிர்மலாவை தேவன் விடுவித்தார்.

பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள சனிம் சுகம்பெற... பாஸ்லைன் பகுதியில் தொடரும் திறந்தவெளிக் கூடுகைகள் பலன்தர... சாய்தாபாத் கிராமம் முற்றிலும் சுவிசேஷமயமாக...

**23 மேற்கு வங்காளம், தளம்: பதாரியா ஊழியர்: சஞ்சய் சாக்சா**

தலேஷ், ஜாஸியா வீட்டாரனைவரும் இயேசுவையே சேவிக்க தீர்மானித்தனர். ஜோசலைன் பகுதிச் சிறுவர்கள் நடுவில் சுவிசேஷ தாகம் கண்டோம். பதாரியா ஊரார் சுவிசேஷத்திற்கு அனுகூல பிரதியுத்தரம் தருகின்றனர்.

விசுவாசிகளான சமீர், ரஞ்சிதா மூலம் குடும்பங்களும் கர்த்தரை கண்டுகொள்ள... ஜூலுவின் மதுப்பழக்கம் மாற... ஜங்கல் கிராமத்தில் நற்செய்தி நிரல் பெற்றுக்கொண்டோர் மனந்திரும்ப... விசுவாச அறிக்கைக்கு ஆயத்தமாகும் ரேனுகா வீட்டாருக்காக....

**24 ஒடிசா, தளம்: பாகாபந்த் ஊழியர்: மங்கள்சிங் சாமத்**

சுவிசேஷம் கேட்ட சனோஜ் மதுப்பழக்கத்திற்கு முற்றுப்புள்ளியிட்டார். ராம்பூரில் 12 பேர் கொண்ட விசுவாசிகள் ஐக்கியத்தை கர்த்தர் உருவாக்கினார். மனோஜ் என்பாரின் வியாதிப்படுக்கை இயேசுவின் நாமத்தில் மாறியது.

பிம்தா கிராமத்தாரை இல்லந்தோறும் சந்திக்க முயற்சிக்கிறோம். இரவுக் கூட்டங்களுக்கு விளக்குகள், இசைக் கருவிகள் அவசியம். பைகோலா, மங்கள்பூரில் சபை உருவாக...

**25 ஒடிசா, தளம்: பதாசாஹி ஊழியர்: பிரமோத் குமார் ஹெம்ரோம்**

கிசான் துடுவின் இல்லம் ஆராதனை கூடமானது. 'கதகோதா'வில் வசனங் கேட்ட 18 பேரில் 16 பேர் புதுவாழ்வுக்குள் வந்தனர். பதல் முர்மு குடும்பம் மாயை வணக்கத்திற்கு முற்றுப்புள்ளியிட்டது.

பிஸ்வநாத் வீட்டில் கூடும் சபை வசனங்களில் வளர... 'நடியா'வில் இயங்கும் வேதபாட வகுப்பு, ஆராதனை குழுவாய் மலர... 'நைகுலா சாஹி'யில் இன்னும் 55 குடும்பங்களுக்குக் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கவேண்டும்.

## என் கண் கண்ட அண்ணன்

**"வேகம்... எழுத்திலும் வேகம், எண்ணத்திலும் வேகம், பாடுவதில் - நடையில் - சொல்லில் - செயலில் வேகம்! என்னைத் தம்பி என்றழைக்கும் எமில் அண்ணனின் தொனியை 1974 துவக்கத் திலிருந்தே கேட்குமளவிற்கு நெடுநாட்களான, நெருக்கமான தொடர்பில் தேவன் என்னை வைத்திருந்தார். பவுல் போன்ற தூயவர் பெற்ற வேலையைப் பொறுப்பேற்ற நாள் துவக்கம் வேகவேகமாகவே இயங்கினார்கள், இயக்கினார்கள். இயேசுவின் வருகையில் மேகமீதினில் அண்ணனைக் காண்பேன்."** – ஆ. பாஸ்கரன், ஹைதராபாத்.



## தீவிர சிந்தனையாளர்

**சகோ. எமில் அவர்கள் என் நெஞ்சில் என்றும் நின்றுகொண்டிருப்பார்கள். எழுப்புதலுக்கு ஓர் இதயத் துடிப்பாய், தீவிர சிந்தனையாளராய், செயல்வீரராய் வாழ்ந்த அவர்களின் ஊழிய நாட்கள் சுவிசேஷ வரலாற்றின் சிறப்பான நாட்கள். ஆத்தும பாரம், மிஷனெரி தாகம் பெற்ற பண்பாளர். MI 2000 கூட்டம் நடத்துகையில், உடன் ஊழியர்களுக்கும் ஊழியத் தலைவர்களுக்கும் அவர்கள் தந்த முன் மாதிரிகளை நினைவுகூருகிறேன். சகோ. எமில் அவர்கள் பாடினார்கள், இன்றும் பாடுகிறார்கள், என்றும் பாடிக்கொண்டேயிருப்பார்கள்!**

– பிரதம பேராயர் Rt. Rev. Dr. எஸ்றா சற்குணம், ECI பேராயம்

**26 குஜராத், தளம்: ஹரிஃபளியா ஊழியர்: காசிராம் கோட்டுவாலியா**

பக்கவாதத்தினால் படுக்கையிலிருந்த மாலுபேன் இயேசுவின் நாமத்தில் எழுந்து நடக்கிறாள். சத்தன்பாய் இல்லக் கூடுகை 9 பேர் நற்செய்தி அறிய ஏதுவாயிற்று. 'பராஸ் ஃபளியா'வில் வசனம் செல்லும்படியான வாசலை கர்த்தர் கட்டளையிட்டார்.

மன நோயிலிருக்கும் துளசிபாய்க்கு இயேசுவின் தொடுதல் தேவை... 'பாமாதியா'வில் தொடரும் இரவுக் கூட்டங்களுக்கு இசைக்கருவிகள், இரவு விளக்குகள் தேவை... மதுபானங்களைக் காய்ச்சும் குடும்பங்களோடு கர்த்தர் இடைபட...

**27 குஜராத், தளம்: ஈசாநகர் ஊழியர்: நரேந்திரபாய் வசாவா**

ஜெபத்தினால் மாங்கிபேனுக்குத் தேவன் தெளிவான கண் பார்வை தந்தார். செலால்பூர் ஆராதனை குழுவில் பங்கேற்போர் எண்ணிக்கை 46ஆக உயர்ந்தது. கருந்தேள் கடியினால் பாதிக்கப்பட்டிருந்த பிக்கிபேன் உயிரை கர்த்தர் கிருபையாய்க் காத்தார்.

பாபலாபாயின் மதுப்பழக்கத்தினால் குடும்பம் வாடுகிறது... பின்வாங்கிப்போன கணேஷ்பாய், சீதாபேன் மீண்டும் சபை சேர... பணிக்கெதிராய் வரும் மெராஜிபாயை தேவன் சந்திக்க...

**28 மகாராஷ்டிரா, தளம்: கர்ஜத் ஊழியர்: தமீப் துரேந்தர்**

பாவ அறிக்கைசெய்த 12 பேர் விசுவாசிகள் ஐக்கியத்தில் சேர்ந்துள்ளனர். கொரகாவ் கிராமத்தில் மேலும் 5 குடும்பங்கள் கர்த்தருக்குச் சொந்தமாயின. புதிய விசுவாசியான சஞ்சய் என்பாரின் சாட்சி அநேக இதயங்களுக்கு ஆறுதல் அளிக்கின்றது.

'சிகோலி'யில் இயங்கும் சபைக்குத் தரை விரிப்புகள் அவசியமாகிறது... சமாதானத்திற்குத் தூரமாகிப் போன எலுபாய் குடும்பத்திற்காக... 'கொல்வாடி'யில் இயங்கும் வேதபாட வகுப்பு, ஆராதனை குழுவாய் மலர ஜெபியுங்கள்.


**விஷ்வவாணி சிறுவர் கூடுகை / டெக்நியூநியா 2014**

இடம்: கன்கார்டியா மேல்நிலைப் பள்ளி, *வள்ளியூர்.* நாள்: 8 பெப்ரவரி 2014

நேரம்: *காலை 9 - மாலை 4 வரை;* அனுமதி இலவசம்; மதிய உணவு உண்டு


## பிரியமலர்

**"சகோதரன் எமில் அவர்களுள் நீதி, சாந்தம், அன்பு ஒருங்கிணைந்து இருந்தது. கிறிஸ்துவின் பணியில் அவர்தம் அர்ப்பணிப்பும், தெய்வீக ஞானமும் அவர் வாய் மலர்ந்த வார்த்தைகளில் வெளிப்பட்டன. அவர் பின்வைத்துப்போன சேமிப்பாகிய வாழ்க்கை முறைக்காக தேவாதி தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். தேவன் தனக்கு மிகவும் பிரியமான மலராகிய சகோதரன் எமிலை பூமியிலிருந்து பறித்து விண்ணகத்தின் மேஜையை அலங்கரித்தார். அல்லேலூயா."** – ஹின் ஹியால் கோ, சிங்கப்பூர்.



# சந்திப்பேன்...



*11 வருடங்களுக்கு முன் விஷ்வவாணி பணியில் பயிற்சிக்காக பரமன்கேணி தியான நிலையத்திற்கு வந்த பொழுது, எமில் அண்ணனுடன் நெருங்கி வேலை செய்யும் வாய்ப்பைத் தேவன் தந்தார். இளைஞனாயிருந்தபோதும் பொறுப்புகளைத் தாராளமாய்த் தந்து, நேர்த்தியாய் நிறைவேற்ற உடனிருந்து ஊக்கப்படுத்துவார்கள். முகாமிற்கு வரும் விசுவாசிகளுக்கு நாற்காலிகளைத் துடைத்து, கயிறு கட்டி நேர்த்தியாய் அடுக்குவதிலும் அண்ணனின் கரம் எங்களோடிருக்கும். நற்கருணை ஆராதனை ஆயத்தத்திற்கு அண்ணன் அளிக்கும் முக்கியத்துவம் வேறெங்கும் நான் கண்டதில்லை. பிலதெல்பியா அரங்கத்தில் காலணிகளைக் கழற்றும் இடம் துவங்கி, பாய்கள், நாற்காலிகள், மேடை வரை துல்லிபமாய் ஒழுங்குபடுத்தும் வரை சற்றும் ஓயமாட்டார்கள்! அதிகாலையில் எங்களுக்கு முன் அரங்கத்தில் காத்திருப்பார்கள் இணைந்து ஜெபிப்பதற்கு. ஜெபத்தில் வாஞ்சை, உழைப்பில் பேரார்வம், ஊழியத்தில் தீவிரம் அனைத்தும் கற்றது அண்ணன் மூலமாகத் தான். அதுவே என் இன்றைய ஊழிய வெற்றிக்குப் படிக்கட்டுகள். ஒடிசாவின் திரள் கூட்ட விசுவாசிகளைச் சம்பாதித்துக்கொண்டு சந்திப்பேன் மேல் வீட்டில்.* – பெஞ்சமின் தாஸ், ஒடிசா

## எமில் அண்ணனின் மறைவு இந்திய திருப்பணிக்கு பேரிழப்பு

கல்லூரி வாழ்வில் இருந்தே அண்ணனோடு மிஷனெரிப் பணியில் மகிழ்வுடன் இணைக்கப்பட்டவன் நான். குமரி மாவட்டத்தில் பற்பல கல்லூரிகளில் கர்த்தர் அண்ணனை பயன்படுத்திய இளமையின் நாட்கள் இன்றும் எனக்குப் பசுமையான நினைவுகள். அவர்களுடைய அர்ப்பணம் மிக்க ஊழியம், அப்புறமான இடங்களைக் குறித்த ஓயா சிந்தனை, சொல்லப்பட்டிராத கிராமங்களுக்கு சாரை சாரையாய் சுதேச ஊழியர்களை அனுப்புவதற்கு விஷ்வவாணி பணியின் மூலம் அண்ணன் எடுத்த கடும் பிரயாசங்கள் யாவற்றுக்காகவும் எங்கள் புதுச்சேரி ஜெபக்குழு தேவனை மனதாரப் போற்றுகின்றது. – ஈபன் ஜெயராய்

## இறுதி வரிகள்...

அந்த வரிகள் ஆழ்ந்த அர்த்தம் நிறைந்த வரிகள்! மருத்துவமனையில் ஒரு கையில் குத்தப்பட்ட ஊசி வழியாய் மருந்துகள் ஏறிக்கொண்டிருக்கும் வேளையில், எமில் அண்ணனின் வலது கை விஷ்வவாணி சமர்ப்பண் பத்திரிகைக்காக தலைப்பு ஒன்றை எழுதிக் கொண்டிருந்தது. அந்த அர்த்தம் மிக்க வரிகள்: ‘‘**சுவிசேஷ ஊழியத்திற்குக் கொடுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும்**’’.

## முழவு கவி

உறக்கம் தெளிவோம் துவக்கம் இருநூறுக்கும் மேற்பட்ட இனிய பாடல்களை இயற்றி, இராகம் அமைத்து, கிறிஸ்தவ இசை உலகுக்கு உயிரோட்டம் கொடுத்த எமில் அண்ணனின் இறுதி கவி இதுதான்.

**‘‘சாத்தானைக் குறித்து ஜாக்கிரதையாய் இரு – அவன்**
**சிங்கம்போல் சுற்றித் திரிகிறான்.**
**ஓடும் காலைத் தட்டிவிடும், வாழ்க்கையைச் சாகடிக்கும்**
**சாத்தானைக் குறித்து ஜாக்கிரதையாய் இரு**
**இயேசுவை நோக்கிக் கொண்டிரு.’’**



ஆராய்ச்சி, தகவல் சேகரிப்பு மற்றும் சேவை மையத்திற்காக

## எமில் ஜெபசிங் ஞாபகார்த்த நிதி

அறியப்படாத மற்றும் தேவை நிறைந்த மக்கள் இனங்களின் தேவையைப் பூர்த்தி செய்ய, அண்ணன் காட்டிய இயேசுவின் அன்பை – கரிசனையை நாம் ஒவ்வொருவரும் தொடர்ந்து வெளிக் காட்ட எமில் அண்ணன் நினைவாக, ஓர் ஆராய்ச்சி தகவல் சேகரிப்பு மற்றும் சேவை மையத்தை 'தி குட் சமாரிட்டன்ஸ்' மூலமாக உருவாக்கிட திட்டமிட்டுள்ளோம்.

இயேசுவின் நாமத்தைக்குறித்து ஒருமுறை கூட கேள்விப்பட்டிராதவர்களை கிறிஸ்துவின் அன்பிற்குள் கொண்டுவருவதற்கு ஜெபிக்கும், உழைக்கும், வழிநடத்தும் யாவருக்கும் எல்லாவித தகவல்கள், உதவிகள், பயிற்சியளிப்பதற்கு இந்த மையம் ஏதுகரமாக அமையும்.

நீங்கள் ஒவ்வொருவரும் ஆர்வத்தோடும், பாரத்தோடும், மனப்பூர்வமாயும் இவ்வாராய்ச்சி மையம் அமைக்கப்பட, அதன் தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள், உதவுங்கள், தொடர்புகொள்ளுங்கள்.

எமில் அண்ணனின் தரிசனத்தை
நிறைவேற்றும் பணியில்,
**டாக்டர். திருமதி. ஆனந்தி ஜெபசிங்.**

இதுகுறித்த விபரம் அறிய, உதவியளிக்க தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:


Winsor Daniel
THE GOOD SAMARITANS
49/D, Bryant Nagar,
Tuticorin - 628 008.
Phone: 0461-2376914, 98431 96860
Email: winsortgs@gmail.com


## நடப்புச் செய்திகள்

**தேசிய** மாதிரி சர்வே அலுவலகம் சார்பில் சமீபத்தில் சர்வே எடுக்கப்பட்டதில், இந்தியாவில் நகர்ப் புறங்களில் வசிக்கும் மக்கள் குடிநீர் எடுப்பதற்காக தினமும் 31 நிமிடங்களும், கிராமத்துப் பெண்கள் 35 நிமிடங்களும் செலவழிக்கின்றனர் என தெரியவந்துள்ளது.

**குடிநீர்** இணைப்பு உள்ள வீடுகள் இந்தியாவில் அதிகளவில் இருந்தாலும், கிராமப்புற பெண்கள் குடிநீருக்காக 5 கி.மீ. தூரம் வரை நடந்துசெல்கின்றனர். சில கிராமங்களில் 2 முதல் 5 கி.மீ., தூரம் வரை பெண்கள் நடந்துசெல்கின்றனர்.

**சென்னை** குடும்பநல கோர்ட்டில் 2013ம் ஆண்டில் 4,829 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இது கடந்த 8 ஆண்டுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளுடன் ஒப்பிடும்போது மிக அதிகமாக உள்ளது. தற்போது சுமார் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வழக்குகள் பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளன. எனவே இங்குள்ள 4 கோர்ட்டுகள் போதாது. குறைந்தது 15 கோர்ட்டுகளாவது இருந்தால்தான், ஆண்டுக்கு ஆயிரம் வழக்கு என்ற வீதம் 15 ஆயிரம் வழக்குகளை பைசல் செய்யமுடியும்.

## ஜெபிக்கிறோம், ஜெபியுங்கள்



*1993 துவக்கம் விஷ்வவாணி ஊழியத்தின் பிரதிநிதியாகிய பொறுப்பை சென்னையில் மிகுந்த அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் செய்து வந்த கனத்திற்குரிய அண்ணன் திரு. L. மாணிக்கராஜ் அவர்கள் (வயது 63) 14.12.13 அன்று மகிமைக்குள் பிரவேசித்தார்கள். ஊழியத்தின் அனைத்து பகுதிகளிலும் அளித்த ஆதரவு, ஆழ்ந்த ஈடுபாடு, யாவுக்காகவும் தேவனைப் போற்றுகிறோம். திருமதி. சரோஜா மாணிக்கராஜ் அவர்களுக் காகவும் அன்புப் பிள்ளைகளின் ஆறுதலுக்காகவும் ஜெபிக்கிறோம், ஜெபியுங்கள்.*

## இராஜஸ்தான், உத்திரப்பிரதேசம், திரிபுரா, குஜராத், ஆந்திர மாநிலங்களின்

# பணித்தளங்களில் பிரதிஷ்டையான புதிய ஆலயங்கள் பத்து!


Vodakoyya, A.P. - 11.12.13


Magraisardar Kami, Tripura - 15.12.13


Kumari, A.P. - 22.12.13


Sandhiguda, A.P. - 22.12.13


Thankidi, A.P. - 22.12.13


Motiya, Rajasthan - 26.12.13


Gajulagondi, A.P. - 29.12.13


Tiwaripur, Uttar Pradesh


Mulaguda, A.P. - 05.01.14


Jogthava, Gujarat - 15.01.14

RNI REGD. NO. RN. 45021/89 | POSTAL REGD. NO. HSD/182/12-14 WPP NO. AP/SD-06/WPP/2013-14-TAMIL



தென்கோடியில் தோன்றி,
வடதிசையின் அற்றம்வரை
சுவிசேஷ வாசனை வீசிய
சுவிசேஷ மலர் ஒன்று பறிக்கப்பட்டது -
பரலோக வாசலை அலங்கரிப்பதற்கு
அதன் உரிமையாளரால்
பறித்துக்கொள்ளப்பட்டது!
சுத்தாங்க சுவிசேஷத்தின்
பிரபல்யத்திற்காய் சுனாமிபோன்று
அலை அலையாய்
சுதேச ஊழியர்களை எழுப்பிவிட்ட
அந்த அழகிய பாதங்கள்
பரதீசின் இளைப்பாறுதலுக்குள்
பிரவேசித்துவிட்டது.

சுவிசேஷ சங்கு ஊதுதலை
உங்கள் அனுபவத்திலிருந்து கற்றோர்
ஊரெங்கும் உலகெங்கும்
உயர்த்தி ஊதுகின்றார் -
இயேசுவே ஆண்டவர் என
முழங்குகின்றார்!
உலகளாவிய ஊழிய வாய்ப்பு
உங்களை வருந்தியழைத்தபோதிலும்
'இந்தியர் இரட்சிப்படையவேண்டும்' என்ற
ஆதிநாள் அர்ப்பணத்தில்
இறுதிவரை உறுதி காத்தீர்கள்,
இயன்றவரை உழைத்தீர்கள்,
இயக்கத்தின் சக்கரங்களுக்குச்
சுழல்வேகம் தந்தீர்கள்!
"இலட்சம் கிராமங்கள் இயேசுவுக்கு" என
இரவு பகல் பாராது கடும்பிரயாசமெடுத்தீர்கள்!

தங்கள் தரிசன அடிச்சுவட்டில்
தூய ஆவியானவரின் துணையுடன் -
தேவ தயவுடன் முன்நடக்கின்றோம்!
"பிரதிநிதிகள் - ஜெபப்பங்காளர்கள் -
சுதேச பணியாளர்கள்" எனும்
தங்கள் முப்பெரும் அணுகுமுறைகளுடனே முன்செல்கின்றோம்
"வேத வசனம், முழங்கால், பணிந்த சிந்தை, பரந்த தரிசனம், பரிசுத்த ஜீவியம்,
தாழ்மை, சகிப்புத்தன்மை, சகோதர சிநேகம், விட்டுக்கொடுப்பு, ஒருமனம்" என்ற
தங்களது பணி அணிகலன்களைத் அணிந்தவர்களாய்
சொல்லப்பட்டிராத இடங்களை நோக்கி முன்னேகுகின்றோம்!
சுவிசேஷ ஜுவாலை மாநிலம், மாநிலமாய் ஜொலிக்கின்றது,
அன்பெனும் அணையா தீபம் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது;
அப்புறமான கிராமங்களில் கொழுந்துவிட்டு எரிகின்றது,
அண்ணன், "அலை அலையாய் ஊழியர்கள் எழும்பினார்" என்பதை அனுபவத்தில் கண்டீர்கள்;
"பரலோகத்தை இந்தியர்கள் நிரப்புவார்" என்பதையும்
பரத்தில் கண்டு களிகூருவீர்கள்! ஆமென்.

VISHWA VANI SAMARPAN - TAMIL LANGUAGE
Printed and Published by P. Selvaraj on behalf of VISHWA VANI, a registered society
(Regn. No.17871 of 1987) and printed at APSARA PRINTING WORKS, 2-3-720/10/B, Amberpet, HYD-13
and published at 1-10-28/247, Anandapuram, ECIL Post, HYD-62.
EDITOR: P. SELVARAJ POSTING DATE: 23.01.2014